பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 16 வியாழக்கிழமை (28.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 94

## வாகன அணிகளின் நேரத்தை 45 நிமிட நேரத்திற்கு மட்டுப்படுத்தி மக்கள் போக்குவரத்தை சீராக்க ஏற்பாடு

### கள விஜயத்தின்போது முடிவு

யாழ்ப்பாணம், பெப். 28

குடாநாட்டில், படையினரின் வாகன அணிகள் செல்லும் குறிப்பிட்ட வேளைகளில் அவற்றை 45 நிமிடங்களாக மட்டுப்படுத்தி மக்கள் போக்குவரத்தை இலகுவாக்குவதற்கு - சீராக்குவதற்கு - இணக்கம் காணப்பட்டுள்ளது.

படையதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரமுகர்களும் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட கள விஜயத்தின்போது இந்த ஒழுங்கை மேற்கொள்ள முடிவாகியது.

குடாநாட்டு மக்கள் படையினரின் வாகன அணி காரணமாக பெரும் பாதிப்பையும் சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

அவை சம்பந்தமான மக்களின் முறைப்பாடுகளை அடுத்து, களவிஜயம் ஒன்று நேற்று முன்தினம் ஏற்பாடாகியிருந்தது.

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

# 13ஆவது திருத்தம் அமுலாவதை ஜனாதிபதி இப்போதும் விரும்பவில்லை!

## சர்வகட்சிக்குழு கேட்டதால் அதனைச் செய்கிறாராம்!!

கொழும்பு, பெப்ரவரி 28

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை இப்போதும் கூடத் தாம் தனிப்பட்ட முறையில் விரும்பவில்லை என்று கூறியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அதனைச் செயற்படுத்தும்படி தம்மை வலியுறுத்துவதால் அதைச் செய்வதற்குத் தாம் முன்வந்திருக்கின்றார் என்றும் குறிப்பிட்டார் என அறியவருகின்றது.**

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமே அவர் இப்படித் தெரிவித்தார் என நம்பகரமான வட்டாரங்கள் 'உதயனு'க்குத் தகவல் வெளியிட்டன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மேற்படி சந்திப்பின் போது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிய விடயம் குறித்து இரு தலைவர்களும் விசேடமாகக் கலந்துரையாடினர் என்று தெரிகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் கட்டணம் 138ரூபா உயர்கிறது

யாழ்ப்பாணம், பெப். 28

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கான ஒருவழிக்கட்டணம் 3300ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை கப்பல் நிறுவனம் விடுத்துள்ளதாக யாழ். மேலதிக அரச அதிபர் ஆர்.சிவசுவாமி தெரிவித்தார்.

எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் இந்தக் கட்டண அதிகரிப்பு நடைமுறைக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட

## அகதிகளைத் திருப்பி அனுப்ப சுவிஸ் நீதிமன்றம் தடை!

கொழும்பு,பெப்.28

சுவிட்ஸர்லாந்தில் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை நாடு கடத்துவதற்கு எதிராக அந்த நாட்டின் சமஷ்டி நிர்வாக நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கொழும்பிலும், இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதிகளிலும் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியுமென்று கருத முடியாதெனத் தெரிவித்து நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதல்களுக்குப் பயந்து பிரபா பங்கருக்குள் பதுங்கியுள்ளாராம்!

### இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நாணயக்கார சொல்கிறார்

கொழும்பு, பெப். 28

கிளிநொச்சியில் அரச விமானப்படையினர் மேற்கொண்டுவரும் விமானக்குண்டுத் தாக்குதல்கள் காரணமாகப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 'பங்கர்'களுக்குள்ளேயே பதுங்கிக் கிடக்கின்றார். மோதல்களில் கொல்லப்படும் புலி உறுப்பினர்களின் இறுதி நிகழ்வுகளில் கூட இதன் காரணமாக அவரால் கலந்துகொள்ள முடியவில்லை - என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலாளர் நாயகத்தின் செய்தியை அரசுக்கு எடுத்து வந்தார் அங்கெலா கானே!

### முழுவிடயங்களையும் அறிந்துகொண்டே அவர் இங்கு விஜயம்

கொழும்பு, பெப்.28

இலங்கையில் உள்ள நிலைமையை நன்கு அறிந்து கொண்டே ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகம் அங்கெலா கானே அம்மையார் இலங்கைக்கு விஜயம் செய்தார். எனவே, இங்கு பாதிக்கப்பட்ட தரப்புகளின் பிரதிநிதிகளை அவர் சந்தித்துப் பேசினாலும் புதிதாக விடயங்களை அறிந்து கொள்வதற்கு அவருக்கு எதுவும் இருந்திருக்காது.

அத்தோடு, ஐ.நா. செயலாளர் நாயகம் ஒரு செய்தியை இலங்கை அரசுக்குத் தெரிவிக்க விரும்பினார். அதை அங்கெலா கானே எடுத்து வந்து அரசுக்குத் தெரியப்படுத்தினார். அவ்வளவே.

- ஐ.நாவுடன் தொடர்புடைய வட்டாரங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தல் வன்முறைகள் மிகமிகக் குறைவு என்கிறது அரசு

கொழும்பு, பெப். 28

கிழக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமை முதல் இப்போது வரை மட்டக்களப்பில் ஆக 26 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் மாத்திரமே இடம்பெற்றுள்ளன என்றும் அவையும் கூட மிகச் சாதாரண சம்பவங்களே என்றும் அரசு அறிவித்துள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைவாக விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

அரச பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்று இத் தகவலைத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பாதுகாப்பு ஊடகமத்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்த - ரணில் சந்திப்புக்கு இந்தியத் தூதுவரே ஏற்பாடு; பிரிவினைவாதத்துக்கு துணைபோனால் வெளியேற்றுவோம்!

### ஜே.வி.பியின் குற்றச்சாட்டும் எச்சரிக்கையும்

கொழும்பு, பெப். 28

மஹிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்காவும் சந்திப்பதற்கு கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரே ஏற்பாடு செய்தார் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியா இந்த நாட்டில் பிரிவினைவாதத்துக்கு துணைபோனால் அதனை இங்கிருந்து வெளியேற்றுவோம்- என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மஹிந்த - ரணில் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அது குறித்து அவர் மேலும் கூறியதாவது:- இலங்கையில் மேற்குலக நாடுகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெள்ளை வானில் வந்தோரால் கைதடி, நல்லூரில் இருவர் கடத்தல்

யாழ்ப்பாணம், பெப்.28

வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோரால் இருவர் கடத்திச் செல்லப் பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூரைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான இராச லிங்கம் பாலமுரளி (வயது-29) என்பவர் நேற்று நண்பகல் யாழ்.மருத்துவபீடத்துக்கு அண்மையில் வைத்து வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாக அவரது பெற்றோர் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கைதடி மத்தி, உதயசூரியன் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி இராஜேஸ்வரன் (வயது-30) என்பவரும் நேற்றுக் காலை வெள்ளைவானில் வந்த இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் தொழிலாளியான இவர் நேற்றுக் காலை 7.15 மணியளவில் பணிக்குச் சென்று கொண் டிருந்த போது கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. (அ-288)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் சத்துணவு மா விநியோகத்திற்குத் தடை

யாழ்ப்பாணம்,பெப்.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு மதிய உணவாக விநியோகிக்கவென வழங்கப் பட்ட சத்துணவு மா சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

சத்துணவு மாவில் வண்டுகள் காணப்படுவதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டது.

மாணவர்களுக்கு மதிய உணவாக விநியோகிக்கவென கடந்த மாதம் வழங்கப்பட்ட சத்துணவு மாவே தடை செய்யப்பட் டுள்ளது.

பாடசாலைகளின் ஒவ்வொரு தவணைகளிலும் மதிய உணவுக்கான பொருள்கள் வழங்கப்படுவதாகவும் உணவுப் பொருள்கள் பொது சுகாதாரப் பரிசோதகரின் பரிசோதனைக்குப் பின்னரே பயன்படுத்தப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சத்துணவு மாவினை பாடசாலையிலிருந்து மீளப் பெறுமாறு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (1-207)


## Calling for Tender
## Teaching Hospital, Jaffna.
### Renovation of Medical Officer's Quarters Room No.24 Toilets, T.H., Jaffna.

1. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed Tender for Renovation of Medical Officer's Quarters Room No.24 Toilets, T.H., Jaffna. Up to 10.00 a.m. on 05/03/2008. Tender form may be collected from Director, Teaching Hospital. Jaffna up to 03/03/2008 on payment on non refundable deposit of Rs: 1500/=.
2. Tender will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening Tenders.
3. Tender Forms are issued only contractors having valid registration in grade-M9-and above in the Field of building constructions and other institute of construction Training and Development (ICTAD) criteria and valid member ship of National Construction of contractors association of Sri Lanka. (NCCASL)
4. Sealed Tender may be despatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender box at Teaching Hospital Jaffna on or before 10 a.m. on 05/03/2008.
5. Tender document may be inspected free of charge at the Resident Engineer's Office CECB, T.H.,Jaffna.
6. For further details please contact Hospital Secretary TH, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital, Jaffna.**

(சி/551615)


# அக்கரைப்பற்றில் எண்மர் கைது

கொழும்பு, பெப். 28

அம்பாறை, அக்கரைப்பற்றிலுள்ள ஆலவேம்படுப் பகுதியில் நேற்றுக்காலை பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 8 பேர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப் பட்டு அக்கரைப்பற்றுப் பொலிஸாரினால் கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, பொலனறுவையில் உள்ள மன்னம்பிட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பெண்புலி உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவரையும் மன்னம்பிட்டிப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருக்கின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# பீரங்கித்தாக்குதலில் இளம் தாய் காயம்

கிளிநொச்சி, பெப். 28

மணலாறு இராணுவத் தளத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, செம்மலைப் பகுதியை நோக்கி கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் மூன்று பிள்ளைகளின் தாயான ரவிக்குமார் ராஜேஸ்வரி (வயது - 35) என்பவர் காயமடைந்தார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (சி)

# தரம் 5 மாணவர்களுக்கு இன்று மதிப்பீடு

யாழ்ப்பாணம்,பெப்.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஐந்து வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான மதிப்பீடு - 3 நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

மதிப்பீட்டுக்கான வினாத்தாள்களை இன்று வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல் விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார். (1-207)

## 25ஆம் வருட நீங்காத நினைவுகளுடன்...



**அமரர் கனகசபை சச்சிதானந்தன்**
(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)

மலர்வு 28-04-1928
உதிர்வு 28-02-1983

*கால் நூற்றாண்டு சென்றதப்பா உங்களைப் பிரிந்து*
*கட்டுப்பாட்டுடன் கருத்துடனே காலத்தை*
*களிப்புடன் கழித்தோம் நாமும்*
*காலன் அவனோ உங்களைப்போல் தன்*
*கடமையைக் கண்ணியமாய்*
*ஆற்றுகின்றான் நும் வீட்டில்*

*உங்கள் பிரிவால் துயருறும்*
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

*மூளாய், சுழிபுரம்.* (71492)

## மரண அறிவித்தல்

### செல்வி உஷாந்தினி சந்திரரெத்தினம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி உஷாந்தினி சந்திரரெத்தினம் நேற்று (27.02.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரரெத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகள் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2008) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,**
*கொக்குவில்.* (B)

தகவல்:
தந்தை (சந்திரன்)

## கண்ணீர் அஞ்சலி

**யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரிந்த திருமதி**

**ஜெகதீஸ்வரி இரட்ணராஜா**

*அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி ஜெகதீஸ்வரி இரட்ணராஜா
(தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

...மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

ஒன்றாக இணைந்தாய் ஜெகா, தாதியர் பாடசாலையில் கூடியே பணியாற்றினீர். போதனா வைத்தியசாலையில் இன்று உம்மைத் தனியாகப் பறித்தானோ இறைவன் எம்மைவிட்டு.

*உன்பிரிவைத் தாங்கமுடியாமல் தவிக்கின்றோம்.*
*உடன்பயின்ற தாதிய உத்தியோகத்தர்கள்.*

*A 88 விசேட, A 88 சாதாரண,*
*87ஆம் ஆண்டுபிரிவில் கல்வி பயின்ற தாதிய உத்தியோகத்தர்கள்*

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி கிருஷ்ணசாமி

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கிருஷ்ணசாமி நேற்று (27.02.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் பராசக்தி, கனகாம்பிகை (ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மு.சிவசுப்பிரமணியம் (மக்கள் வங்கி, சாவகச்சேரி), பொ.சந்திரநாதன் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மாமனும் சதுர்ஷன், சதுர்ஷனா, யதுசரணன், ரூபாதீசன், லவதீசன், மதுஷனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2008) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1 மணியளவில் பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.* (சி/551614)

தகவல்:
பொ.சந்திரநாதன்

### சின்னத்தம்பி நாகலிங்கம்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பொன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகலிங்கம் 24.02.2008 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஞானம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை), காசி விசுவநாதன் (ஜேர்மனி), பாமாருக்மணிதேவி (தாதி உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), ஜெயலட்சுமி (ஆயுள்வேத வைத்தியர், மட்டக்களப்பு), பாலமுருகன் (வைத்தியர், ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராசா, மஞ்சுளா (ஜேர்மனி), பத்மநாதன் (ஆனந்தி), பாஸ்கரன் (ஆயுள்வேத வைத்தியர், மட் டக்களப்பு), தயாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலாம்பிகை, யசிந்தன், காலஞ்சென்ற பாலகௌரி மற்றும் உமாச்சந்திரா, பாலமுரளி, பாலேந்திரன், கஜேந்தினி, கிருஸ்ணா (ஜேர்மனி), சதீஸ், அபிராமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2008) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னாலை தெற்கு,*
*பொன்னாலை.* (71491)

தகவல்:
பத்மநாதன் (ஆனந்தி - மருமகன், பொன்னாலை)

### திருமதி சிவபாக்கியம் (இராசம்மா) தம்பியப்பா



திருநெல்வேலியைப் வாழ்விடமாகவும், கொழும்பு, 48, முகாந்திரம் லேன், தெஹிவளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் (இராசம்மா) தம்பியப்பா 23.02.2008 சனிக்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் தம்பியப்பாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சின்னத்துரை - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும், செந்தில்நாதன், கமலவேணி, விமலாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், சுப்புலெட்சுமி, சுப்பிரமணியம், பாலசுந்தரம் (கனடா) ஆகியோரின் மாமியாரும், கௌசல்யா (லண்டன்), அகல்யா (சுவிஸ்), செந்தூரன் (லண்டன்), றஞ்சினி (டென்மார்க்), சிவதாசன் (கனடா), சண்முகதாசன் (சுவிஸ்), தயாளினி (லண்டன்), கிருபாகரன் (மலேசியா), கரிகரன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், பிரகல்யா, பிரியா (லண் டன்), மகிந்தா, சுரேந்தா (டென்மார்க்), துர்சிகா, அஸ்விதன் (சுவிஸ்), ரம்யன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்தமலர் சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2008) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடை பெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி மேற்கு,*
*திருநெல்வேலி.*

*தகவல்:*
*த.செந்தில்நாதன் (மகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110 வருடங்கள் பழமை வாய்ந்த

# நயினாதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறைப் பாலம் புனரமைப்பின்றி இடிந்து கடலுக்குள் அமிழும் அபாயம்

யாழ்ப்பாணம்,பெப்.28

வேலணைப் பிரதேச சபை எல்லைக் குட்பட்ட நயினாதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறைப் பாலம் மோசமாகச் சேதமடைந்துள்ளது. எந்தநேரமும் இடிந்து கடலுக்குள் அமிழ்ந்துபோகும் நிலையிலுள்ளது.

எனவே 110 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த இறங்குதுறைப் பாலத்தை உடன் புனரமைப்புச் செய்யவேண்டும்.

இவ்வாறு நயினாதீவு தெற்கு கிராம மாதர் அபிவிருத்திச் சங்கம் வேலணைப் பிரதேச சபைச் செயலர் கை.மகேந்திரலிங்கத்திடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நயினாதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறைப் பாலம் மிகவும் அழிவடைந்த நிலையில் உள்ளதால் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

110 வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்த இவ்விரு பாலங்களின் ஊடாகப் பெருந்தொகையான மக்கள் பயணம் செய்கின்றனர். தினமும் 1000 இற்கும் மேற்பட்ட பயணிகள், யாத்திரிகர்கள் பயணம் செய்கின்றனர்.

இதனைவிட பிரசித்திபெற்ற நயினை நாகபூஷணியம்மன் ஆலயமும் நாகவிகாரையும் உள்ள புனித பூமியாகும். ஆனி மாத உற்வசத்தின்போது 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் இங்கு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் மீள்புனரமைப்பு இன்றி அழிவடையும் நிலையில் இவ்விரு இறங்குதுறைகளும் உள்ளன.

எனவே இவ்வருட இறுதிக்குள் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு செயற்படவேண்டும் - என்றுள்ளது.

இதேவேளை -

மேற்படி நயினாதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறைப் பாலம் புனரமைப்புச் செய்யப்படவேண்டியதன் அவசியத்தை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவரும் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளருமான பி.கே.பரமலிங்கம், யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் மற்றும் அதிகாரிகளுடன் உயர்மட்டப் பேச்சு நடத்தியுள்ளார் எனத் தெரியவருகின்றது. (202-95)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் விற்பனை செய்யமுடியாது வைக்கோல் குவிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.28

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் நெல் வயல்களில் அறுவடை செய்யப்பட்ட வைக்கோல் விற்பனை செய்யமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு பெறப்பட்ட வைக்கோல் விற்பனைக்காக வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளுக்குக் கொண்டு செல்லும்போது வழியிலுள்ள சோதனைச் சாவடிகளில் வாகனங்களிலிருந்து வைக்கோல் முழுவதும் இறக்கி ஏற்றவேண்டியுள்ளது. இதற்கென இரு மடங்கு கூலி கொடுக்கவேண்டியுள்ளதால் வைக்கோலைக் கொள்வனவு செய்ய எவரும் முன்வருவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நெல்வயல்களில் வைக்கோல் குவிக்கப்பட்டு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## சங்கானை மதுவரித் திணைக்களத்துடன் மேலும் நான்கு பிரதேசங்கள் இணைப்பு

வலி.தென்மேற்கு,பெப்.28

சித்தன்கேணி சந்திக்கருகாமையில் இயங்கிவரும் சங்கானை பிரதேச மதுவரித் திணைக்களப் பணிமனைப் பிரிவுடன் சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புகளும் பொதுமக்களும் தத்தமது பகுதிகளில் இடம்பெற்றுவரும் கசிப்பு உற்பத்தி, கசிப்பு விற்பனை மற்றும் சட்டவிரோதமாக மது விற்பனை ஆகியன பற்றி பணிமனையின் கவனத்திற்குக் கொண்டுவரமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சரியான தகவல்களை நேரிலோ அல்லது கடிதம் மூலமோ பணிமனைக்கு அறிவிக்கமுடியும் என்றும் -

பொதுமக்களின் ஒத்துழைப்புடன் முறைப்பாடுகள் பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் - பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-135)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.28

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் தாவடி நியூ ஸ்டார் விளையாட்டுக்கழகம்
* கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் ஏழாலை ஞானவைரவர் விளையாட்டுக் கழகம். (202-86)




## புங்குடுதீவு சேவியர் க.கூ. சங்கத்தின் அலுவலகக் கட்டடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.28

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புங்குடுதீவு சென் சேவியர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் இப்புனரமைப்புப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்ட வேலணைப் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி.மீரா, விரைவில் கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் எனத் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம், தொழில்நுட்ப அலுவலர் ப.நந்தீஸ் ஆகியோரும் கட்டடப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (202-95)

## வல்வெட்டித்துறைப் பிரதேச மாணவர்கள் கௌரவிப்பும் கண்ணாடி வழங்கும் நிகழ்வும்

குருநகர்,பெப்.28

வல்வெட்டித்துறைப் பிரதேச பாடசாலைகளில் கற்று 2007ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் தெரிவுசெய்யப்பட்ட இருநூறு பொதுமக்களுக்கு இலவசமாகக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறைப் பிரிவு வைத்தியசாலையில் நடைபெறவுள்ளன.

வல்வெட்டித்துறைப் பிரிவு வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வுகள் இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு, வல்வெட்டித்துறைப் பிரிவு வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர் க.மயிலேறும்பெருமாள் ஆகியோர் தலைமையில் நடைபெறும். வல்வை சிவன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ ப.மனோகரக்குருக்கள், வல்வை முத்துமாரி அம்மன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிதேசிகர் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரத்தில் 3ஏ பெற்ற மாணவன் சண்முகநாதன் அச்சன் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வல்வை மகளிர் கல்லூரி மாணவர்களான மு.புவித்திரா, செ.ரஜிந்தன், ச.சிறிதரன், சி.நிர்மலா, ச.வேணுநாதன் -

வல்வை அ.மி.த.க பாடசாலை மாணவர்களான யோ.அபிராமி, சு.மயூரன், ந.மாதுமையாள், இ.திவ்யா -

வல்வை சிவகுரு வித்தியாலய மாணவர்கள் இ.சுபாசினி, சி.டிசாந்தி, சி.மகாலட்சுமி-

வல்வை றோ.க.த.க பாடசாலை மாணவர்கள் மு.சஞ்சிவன், இ.தசாந்தினி- ஆகியோர் இந்நிகழ்வில் பாராட்டிச் சான்றிதழ்கள், பணப்பரிசில்கள், புத்தகங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக முகாமை கற்கையியல் துறைத் தலைவர் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, யாழ்.மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், ஐ.ஓ.எம். அமைப்பின் பிரதிநிதிகளான கயோவனி கசானி, சி.அருள்ஞானம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வர். (202-51)

பருத்தித்துறைப் பிரதேசத்தில்

## ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமாணத்துக்கு குறைந்த விலையில் சிமெந்து விநியோகம்

கரவெட்டி,பெப்.28

பருத்தித்துறைப் பிரதேச எல்லைக்குள் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனங்கள் சிமெந்து தேவைப்படின் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உலக வங்கியின் உதவியுடன் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்பவர்களுக்கென வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தால் கப்பல்மூலம் சிமெந்து குடாநாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இச்சிமெந்து குறைந்த விலையில் - ஒரு பைக்கற் ஆயிரத்து 500 ரூபா வீதம் - வேலைகளைப் பொறுப்பேற்ற நிறுவனங்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய பருத்தித்துறைப் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆழிப்பேரலை மீள்கட்டுமாண வேலைகளைப் பொறுப்பேற்ற நிறுவனங்கள் தமக்குத் தேவையான சிமெந்தைப் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் கேட்டுள்ளார். (202-70)

## சேற்றிலிருந்த மீன் தாக்கியதில் கச்சாயில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.28

கச்சாய் கடலேரி சேற்றுப் பகுதியில் நடந்துசென்றவரை சேற்றினுள் மறைந்திருந்த மசரி மீன் தாக்கிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த க.ஜெயகாந்தன் (வயது 26) என்பவர் காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (202-207)

## கோப்பாய் தெற்கில் பெரியம்மைத் தாக்கம்

கோப்பாய்,பெப்.28

கோப்பாய் தெற்கு மாதா கோயிலடிப் பகுதியில் பெரியம்மை நோயின் (பொக்குளிப்பான்) தாக்கம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சூழல் வெப்பநிலை அதிகரிப்பினால் பரவும் இந்நோய்க்குள்ளானவர்கள் வீட்டில் இருந்தவாறே சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (202-72)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விஞ்ஞான மன்றம் நடத்திய விஞ்ஞான தினமும் 'மத்திய ஆய்வாளன்' சஞ்சிகை வெளியீடும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பௌதிகத்துறைத் தலைவர் கலாநிதி நா.சிவயோகன், கல்லூரி அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலிரு படங்களிலும் காணலாம்.

மூன்றாவது படம் சஞ்சிகையின் இதழாசிரியரான ஜி.சீ.ஈ. உயர்தர கணிதப் பிரிவு மாணவன் சூ.சுகந்தன் பிரதியைக் கல்லூரி அதிபரிடம் கையளிக்கும்போது எடுக்கப்பட்டதாகும்.

விஞ்ஞான தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவன் ஒருவருக்கு பிரதம விருந்தினர் சான்றிதழ் வழங்குவதை நான்காவது படத்தில் காணலாம்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளில் ஒரு காட்சியை ஐந்தாவது படத்தில் காணலாம். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் நாடாளுமன்றத் தேர்தல்

## பா.ஜ.க. மாநிலத் தலைவர் இல.கணேசன் நம்பிக்கை

சென்னை,பெப்.28

நாடாளுமன்றத் தேர்தல் இந்த ஆண்டே வரும் என்றும், அதற்குத் தங்கள் கட்சி தயாராகி வருவதாகவும் பா.ஜ.க.மாநிலத் தலைவர் இல.கணேசன் கூறியுள்ளார்.

மத்திய - மாநில அரசுகளைக் கண்டித்து, தமிழக பா.ஜ.க. சார்பில்,சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் கூறியவை வருமாறு:-

ஆட்சியா? அமெரிக்காவுடனாகன பாதுகாப்பு ஒப்பந்தமா? என மத்திய அரசை இடதுசாரிக் கட்சிகள் அச்சுறுத்துகிறார்கள். குடியரசுத் தலைவர் பேச்சைத் தொடர்ந்து, அணுசக்தி ஒப்பந்தம் மே மாதத்தில் அமுலாக்கப்படும். அதனையடுத்து, இடதுசாரிகள் தமது ஆதரவை விலக்கிக் கொள்ளலாம். அதன்பிறகு தேர்தல் வரும். இந்த ஆண்டே தேர்தல் வரலாம். தேர்தலுக்காக எங்களை தயார்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

இந்தியாவை அமெரிக்காவின் அடிமை நாடாக மாற்ற முயற்சி நடைபெறுகிறது. அணுசக்தி உடன்பாட்டில், 'ஹைடு' சட்டத்தை பா.ஜ.க. கடுமையாக எதிர்க்கிறது. அதில் இந்தியா அணு ஆயுதச் சோதனை நடத்தினால், நம் மீது பொருளாதாரத் தடை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

பா.ஜ.க.ஆட்சிக்கு வந்தாலும், அணு ஆயுதச் சோதனை நடத்த அமெரிக்காவின் அனுமதி வேண்டும். இது, அடிமைச்சாசனம் இல்லையா?

அணுசக்தி உடன்பாட்டின் அமுலாக்கத்தை மத்திய அரசு நிறுத்தி வைத்து இருக்கிறது. மே மாதத்துக்குள் ஒப்பந்தத்தை அமுலாக்காவிட்டால், ஒப்பந்தம் ரத்தாகும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

எனவே, அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதைத் தவிர்க்க முடியாது. சோனியாவும், பிரதமர் மன்மோகன்சிங்கும் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அணுசக்தி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று குடியரசுத் தலைவர் தனது உரையில் கூறியிருக்கிறார். அப்படியென்றால், ஒப்பந்தத்தை மே மாதத்துக்குள் ஏற்றுக் கொள்வார்கள் என்றே அர்த்தம்.

தோரியம் இருக்கிறதே. அதனால் அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் காரணமாக, நமக்கு மின்சாரம் கிடைக்கும் எனக் கூறுகிறார்கள். ஆனால், அப்துல் கலாம் போன்றவர்கள், 'யுரேனியத்தால் மின்சாரம் தயாரிக்க அதிக செலவு ஏற்படும். மாறாக நம் நாட்டில் தோரியம் மண்டிக் கிடக்கிறது. அதைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கலாம்' என்கின்றனர்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகி இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளால் தமிழ்நாடு காடாக மாறிக் கொண்டிருக்கிறது.

மேலும், விலைவாசி உயர்வும் அதிகரித்து வருகிறது. இதனால் ஏழை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து விட்டன. அவற்றைக் கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுப்பதில்லை - இவ்வாறு அவர் கூறினார். (சி)

# சேது திட்டப் பதில் மனுவை இறுதி செய்தது மத்திய அரசு

## மத்திய அமைச்சரவையும் ஒப்புதல்

டில்லி, பெப்.28

சேது சமுத்திரத் திட்டப் பிரச்சினை தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய பதில் மனுவை மத்திய அரசு இறுதி செய்துள்ளது.

மன்மோகன்சிங் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்துக்காக கடலுக்கடியில் உள்ள இராமர் பாலத்தைத் தகர்க்கக் கூடாது என்று கூறி இந்து அமைப்புகள் வழக்கு தொடர்ந்தன. இந்த வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்றம் இராமர் பாலம் பகுதியில் திட்டத்தை நிறைவேற்ற தடை விதித்தது.

அப்போது சேது சமுத்திரத் திட்டப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவில் இராமர் பற்றி இடம் பெற்றிருந்த கருத்துகளால் கடும் சர்ச்சை உருவானது. அதையடுத்து அந்த மனுவை மத்திய அரசு திரும்ப பெற்றுக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான புதிய பதில் மனுவை தயாரிக்கும் பணியில் மத்திய அரசு ஈடுபட்டது. இதுபற்றி பிரணாப் முகர்ஜி தலைமையிலான மத்திய அமைச்சர்கள் குழு பல முறை கூடி ஆலோசித்தது.

இக் கூட்டத்தில், சேது சமுத்திர திட்டப் பிரச்சினை தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள வரைவு பதில் மனு பற்றி ஆலோசிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது. புதிய மனுவில் முன்னர் உள்டக்கப்பட்ட சர்சைக்குரிய கருத்துகள் தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

முன்னதாக, இப்பிரச்சினை தொடர்பான வழக்கு கடந்த ஜனவரி 31ஆம் திகதி அன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு புதிய பதில் மனுவை தாக்கல் செய்ய, நீதிபதிகள் மேலும் 4 வாரம் கூடுதல் அவகாசம் வழங்கினார்கள்.

எனவே, அடுத்த மாதத் தொடக்கத் தில் அரசு பதில் மனுவைத் தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. (சி)

# கப்பலைத் தகர்க்கும் அணு ஏவுகணை கடலுக்கடியில் வெற்றிகரச் சோதனை

விசாகப்பட்டினம், பெப். 28

கப்பலைத் தகர்க்கும் அணு ஏவுகணையை கடலுக்கு அடியில் வெற்றிகரமாகச் செலுத்தி இந்தியா சோதனை நடத்தியுள்ளது.

கடலுக்கு அடியில் சென்று கப்பல்களைத் தகர்க்கும் 'சகரிகா' என்ற அணு ஏவுகணையை இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் தயாரித்துள்ளது.

28 அடி நீளமும் மூன்றே கால் அடி அகலமும் உள்ள இந்த ஏவுகணை 500 கிலோ எடையுள்ள அணு குண்டைச் சுமந்து செல்லக்கூடியது.

இந்த ஏவுகணை 6ஆவது முறையாக நேற்று ஒரிசா மாநிலக் கடற்பகுதியில் சோதனை செய்து பரிசீலிக்கப்பட்டது. இந்த ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து செலுத்தக் கூடியது ஆகும்.

ஆனால், இந்தியக் கடற்படையில் ஏவுகணையை செலுத்தக் கூடிய நீர்மூழ்கிக் கப்பல்கள் ஒன்று கூட இல்லை.

அதனால், கடற்கரையில் இருந்து 8 கி.மீ. தூரத்தில் கடலுக்கு அடியில் 50 மீற்றர் ஆழத்தில் அமைக்கப்பட்ட தளத்தில் இருந்து இந்த ஏவுகணை வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது.

"இந்தியக் கடற்படையில் ரஷ்ய, ஜெர் மன் நீர்மூழ்கி கப்பல்கள் இருப்பதாகவும் ஏவுகணையை செலுத்தக் கூடிய நீர்மூழ்கிக் கப்பல் ரஷ்யாவிடம்இருந்து விரைவில் வர இருப்பதாகவும் இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத் தலைமை அதிகாரி பிரகலாதா தெரிவித்தார். (சி)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

963 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம்

40 41 50 51

26-02-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4642492 - 4658292

ஜக்பொட் பரிசு ரூபா.1,751,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 348,737 | 10/- | 3,487,370/- |
| 2 இலக்கங்கள் | 32,037 | 20/- | 640,740/- |
| 1 இல. + லக்கினம் | 31,856 | 30/- | 955,680/- |
| 2 இல. + லக்கினம் | 2,889 | 100/- | 288,900/- |
| 3 இலக்கங்கள் | 874 | 500/- | 437,000/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,751,550/- | - |
| மொத்தம் | | | 6,564,690/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 416,473 | | 7,588,190/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,530,800/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 4644994-2-54 |
| இரத்தினபுரி | 4654796-8-31 |
| ஹம்பாந்தோட்டை | 4646081-3-30 |
| காலி | 4651533-7-24 |
| கொழும்பு | 464267[illegible] |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# அணுசக்தி உடன்பாடு அவசியம்

## இஸ்ரோ அமைப்பின் முன்னாள் தலைவர் கருத்து

உதகை, பெப்.28

எதிர்கால இந்தியாவுக்கு, இந்திய - அமெரிக்க அணுசக்தி உடன்பாடு அவசியம் என இஸ்ரோ அமைப்பின் முன்னாள் தலைவர் பேராசிரியர் யு.ஆர்.ராவ் தெரிவித்துள்ளார்.

உதகை முத்தொரை பாலடாவில் உள்ள வானவியல் ஆராய்ச்சி மையத்தில் நடைபெறும் 4 நாள் கருத்தரங்கை நேற்று முன்தினம் தொடங்கிவைத்துப் பேராசிரியர் ராவ் கூறியவை வருமாறு:-

தற்போதைய சூழலில் எதிர்கால இந்தியாவுக்கு இந்திய - அமெரிக்க அணுசக்தி உடன்பாடு மிகவும் அவசியமானதாகும். அணுமின்சக்தியால்தான் எதிர்கால இந்தியாவின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

எனவே, அமெரிக்காவுடன் இந்தியா அணு ஒப்பந்தம் செய்வதில் தவறில்லை.

உலக வெப்பமடைதல் பிரச்சினைக்கு வளரும் நாடுகளே காரணம் என வளர்ந்த நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. இது உண்மையல்ல. உலக வெப்பமடைதல் பிரச்சினைக்கு அனைத்து நாடுகளுமே பொறுப்பாகும். - என்றார் அவர். (சி)

# அரசியல் நாகரிகம் ஒருவழிப் பாதையல்ல என்கிறார் தமிழக முதல்வர் கருணாநிதி

தர்மபுரி,பெப்.28

அரசியல் நாகரிகம் என்பது ஒருவழிப்பாதையல்ல. அது இருவழிப்பாதையாக இருக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

தர்மபுரியில் 1330 கோடி ரூபா மதிப்பிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கிய போதே அவர் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசியல் நாகரிகம் என்பது எப்பொழுதும் ஒருவழிப் பாதை அல்ல. அதை இருவழிப் பாதையாக கருதி,நாம் எந்தக் காரியத்தை இன்றைக்கு நிறைவேற்றுகிறோமோ, அந்த காரியத்துக்கு யார், யார் துணை நின்றார்களோ அவர்களையெல்லாம் பாராட்டுவதுதான் அரசியலிலே நாம் கடைப்பிடிக்க வேண்டிய நாகரிகம்.

இதை எனக்கு கற்றுக் கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா. இத்தகைய மகத்தான காரியங்கள் எல்லாம் நடைபெறுகிறபோது அவருடைய கனவு நனவாகிறது என்ற உணர்வைப் பெறுகிறேன். அப்படி அவர் கண்ட கனவுகளில் ஒன்றுதான் இந்த ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் என்றார் கருணாநிதி.

தருமபுரி, கிருஸ்ணகிரி மக்களின் நீண்டகாலக் கனவான ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் இன்று நிறைவேறப்போகிறது.

இதை நிறைவேற்றிய பெருமை தி.மு.க. ஆட்சிக்கு உண்டு என்பதை தமிழ்நாடு மறுக்காது. வரலாறு விளக்கமாக எடுத்துக் காட்டும். (சி)

## மட்டு. கல்வியியல் கல்லூரிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 8 பேர்

யாழ்ப்பாணம்,பெப்.28

மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரிக்கு யாழ்.மாவட்டத் திலிருந்து 8 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என கல்லூரி பீடாதிபதி எஸ்.பாக்கியராசா அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவ ரம் வருமாறு-

நடனம்: எம்.மேரி டொலறோஸ் (ஆனைக்கோட்டை), ஜே.வி. கம்சத்வனி (கொக்குவில் மேற்கு), ஜி.ராசையா (வண்ணார் பண்ணை),

சங்கீதம் : ஜி.சிவராசா(மானிப்பாய்), எஸ்.நிர்மலா(சுழிபுரம்), ஏ.வசிகலா(மந்துவில்), எஸ்.காரத்திகா(மிருசுவில்)

நாடகமும் அரங்கியலும்: வெ.தர்சிகா (சுதுமலை). (202)

## அதிபர்களுக்குக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.28

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-207)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை
பொன்விழா - 2008

மேற்படி பொன்விழா தொடர்பாக ஆளுநர் சபை, ஒரு சிறப்பு மலரை பிரசுரிக்கத் தீர்மானித்துள்ளது. செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை நடைமுறையிலுள்ள செஞ்சிலுவைச் சங்க விடயங்கள் தொடர்பான ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்பும் பட்சத்தில் தரமுள்ள ஆக்கங்களை பிரசுரிக்க ஆளுநர்சபை தீர்மானிக்கும். எனவே ஆங்கங்களை 15.03.2008 க்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

கௌரவ தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/551813)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல பாடசாலைகளின் நன்கொடை அதிகரிப்பால் உடுவில் அமெரிக்க மிஷன் பாடசாலையின் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கின்றது



பாடசாலையின் அதிபர் சிதம்பரப்பிள்ளை நடராசா

அயலில் உள்ள பாடசாலைகள் பிள்ளைகளை அனுமதிக்கும்போது பெற்றுக் கொள்ளும் நன்கொடையின் அதிகரிப்பு எமது பாடசாலையில் அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கச் செய்கின்றது என்கிறார் உடுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஒருவர்.

உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட இந்தப் பாடசாலை உடுவில் ஆர்க் வீதியில் அமைந்துள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரியின் வடமேற்குப் புறத்தில் ஒரே எல்லையில் இப்பாடசாலை உள்ளது. 1902ஆம் ஆண்டு மிசனரிமார்களினால் கட்டப்பட்டு இப்பாடசாலை ஒருநூற்றாண்டைக்கடந்துள்ளது.



பாடசாலையில் உள்ள மரக்கறித் தோட்டம்

இப்பாடசாலையின் அதிபர் சிதம்பரப்பிள்ளை நடராசா பாடசாலை பற்றி தெரிவித்ததாவது:-

பாடசாலைக்கு வேண்டிய பல்வேறு உதவிகளையும் கோட்ட, வலயக் கல்வி அதிகாரிகள் செய்துவருகின்றார்கள். இதனால் எமது கல்வி நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லக் கூடியநிலை காணப்படுகின்றது - என்றார்.

பாடசாலையை நல்லதொரு உயர்ந்த இடத்திற்குக் கொண்டுசெல்லவேண்டும் என்ற ஆர்வத்துடன் செயற்படும் ஒருவராக பாடசாலை அதிபர் உள்ளார் என்பதை உணரமுடிந்தது.

பாடசாலையின் வளர்ச்சி, செயற்பாடு




கள் அனைத்தும் தன்னிடம்தான் என்ற மமதை இல்லாமையால் எந்த ஒரு விடயத்தையும் சக ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்துச் செயற்படுத்தும் நல்ல வழிமுறையை அதிபர் கையாண்டு வருகின்றார் என்பதையும் நேரில் காண முடிந்தது.

தரம் 1 முதல் 5 வரை வகுப்புகள் காணப்படும் இப்பாடசாலையில் கடந்த வருடங்களை விட இவ்வருடம் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது இப்பாடசாலையில் 117 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றார்கள்.

இவ்வாண்டு தரம் ஒன்றுக்கு 17 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆறு வருட இடைவெளியின் பின்னர் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 15 பிள்ளைகளில் ஒருவர் அதில் சித்தியடைந்தார்.

இவ்வாண்டு கல்வி கற்கும் பிள்ளைகளில் குறைந்தது ஐந்து பிள்ளைகளையேனும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடையச் செய்யவேண்டும் என்ற ஆர்வத்துடன் ஆசிரியர்கள் செயற்பட்டு வருகின்றார்கள்.

இதற்காக ஓர் ஆசிரியர் குழாமே தமது நேரத்தையும் உடல் உழைப்பையும் செலவிட்டு வருகின்றார்கள் என்பதை பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்கள்.

இப்பாடசாலையில் கற்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் அன்றாடம் உழைப்பவர்களாகவே உள்ளார்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நல்ல முறையில் இயங்குவதுடன் இயலுமான உதவிகளை பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்கி வருகின்றது.

நூற்றாண்டு கடந்த பாடசாலையாக இருக்கின்றபோதிலும் பழைய மாணவர் சங்கம் ஒன்று இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் தற்போதுள்ள அதிபரும் ஆசிரியர்களும் பழைய மாணவர் சங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். மாற்று வலுக்கொண்ட இரண்டு பிள்ளைகள் இப்பாடசாலையில் கற்கிறார்கள்.

ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்

## ஆசிரியர், மாணவர்கள் பங்களிப்புடன் பாடசாலையில் ஒரு மரக்கறித் தோட்டம்

படாதபோதிலும் ஆங்கில ஆசிரியர் இல்லாதமை பெரும் குறையாக உள்ளது. இதன் காரணமாக தொண்டர் ஒருவர் நியமிக் கப்பட்டு மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி புகட்டப்படுகின்றது. இவருக்கான சம்பளத்தை அதிபரும் ஆசிரியர்களும் தமது சம்பளப் பணத்தில் இருந்து வழங்கி வருகிறார்கள்.

இதேபோன்று கிறிஸ்தவ பாடத்திற்கு வேண்டிய ஆசிரியர்ஒருவரும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பிள்ளைகளுக்கு வேண்டிய மலசல கூட வசதிகள் போதுமானதாக இல்லை. கட்டடவசதி, குடிதண்ணீர் வசதி என்பன காணப்படுகின்றன.

தற்போது கல்வித் திணைக்களத்தில் இரண்டரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் பாடசாலையின் வகுப்பறைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் தளபாட வசதிகளும் மாணவர்களுக்குப் போதுமானதாக இல்லை. அவற்றில் பல சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

கடந்தாண்டில் தமிழ் தினப் போட்டிகளில் கலந்துகொண்ட மாணவனான அ. றொனிஸ்ரன் கதை ஆக்கத்தில் கோட்டமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றார். அத்துடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்து விநாயக செல்வம் தனுசன் என்ற மாணவன் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

மாணவர்கள் சஞ்சிகை ஆக்கப் போட்டி, நாடகப் போட்டி, ஆங்கில தினப் போட்டி, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றிலும் ஆர்வத்துடன் பங்கு பற்றி வருகிறார்கள்.

குடும்பப் பாடசாலைகளிடையே இடம்பெற்ற கற்பித்தல் உபகரணக் கண்காட்சியிலும் இப்பாடசாலை வெற்றி பெற்றுள்ளது.

பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லாமை மாணவர்களின் விளை யாட்டு முயற்சிகளுக்கு பெரும் தடையாக உள்ளது. சிறுவர் பூங்காவிலும் போதிய வசதிகள் இல்லை.

உலக உணவுத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. பிள்ளைகள் உணவை உண்பதற்கான பீங்கான்கள் பாடசாலையில் இல்லை. இதனால் புத்தகப் பையில் அவர்கள் பீங்கான்களையும் சுமந்து வருகிறார்கள்.

இப்பாடசாலை முற்றத்தில் மழை காலங்களில் போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு வெள்ளம் தேங்கிநிற்கும் நிலை காணப்படுகின்றது.

**பவித்திரன்**

கடந்தாண்டில் அதிபரின் முயற்சியினால் முற்றத்திற்கு மண் கொட்டப்பட்டுள்ளது. எனினும் அது போதுமானவையாக இல்லை.

மாணவர்களின் பங்களிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முகமாக ஒரு சிறிய தோட்டம் செய்கை பண்ணப்படுகின்றது.




பாடசாலையின் முகப்புத் தோற்றம்

மரக்கறி, வாழை அங்கு பயிரிடப்படுகின்றன. மரக்கறிகளின் வகைகள் உலக உணவுத் திட்டத்தினால் செயற்படுத்தப்படும் சமைத்த உணவு வழங்கலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதிபர், ஆசிரியர் மாணவர்களுடன் இணைந்து இதனைச் செய்து வருகிறார்கள் ✱

# உலக நாடுகளிடையே வேகமாக வளர்ந்துவரும் உலக மயமாக்கல்

பொருளாதார வணிகச் செயற்பாடுகளில் உலக நாடுகளிடையே நிலவிய பல்வேறு தடைகளும் கட்டுப்பாடுகளும் தகர்க்கப்பட்டு உலக நாடுகள் எல்லாவற்றினையும் ஒரே சந்தை அமைப்பாகக் கருதுகின்ற புதிய போக்கு உலகமயமாக்கம் அல்லது பூகோளமயமாக்கம் என அழைக்கப்படுகின்றது.

அதாவது உலகமே சந்தை என்ற அடிப்படையில் வணிகத் தடைகள் நீக்கப்பட்டுத் தொழிற்படும் வணிகச் சூழ்நிலை உலகமயமாக்கல் ஆகும். இந்த உலக மயமாக்கல் கொள்கையினால் ஒருவர் தன்னுடைய தேவை விருப்பத்திற்கேற்ப பொருள்களை உலகின் எப்பகுதியிலிருந்தும் பெறலாம்.

கடந்த இரு தாசாப்தங்களாக உலக பொருளாதார தொழில்நுட்ப மாற்றங்களினால் பல முன்னேற்றங்கள், புரட்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது உலகமயமாக்கல் என்பதாகும். இலத்திரனியல் தொடர்பாடல்களின் வளர்ச்சியினால் உலகமே ஒரு பூகோளக் கிராமமாக மாறியுள்ளது. இந்நிலைமை தகவல் முறைமைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. புதிய மென்பாக உற்பத்திப் பொருள்களின் அறிமுகம் நவீன வியாபார அமைப்புக்களின் விருத்தி என்பன தகவல் முறைமையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

**உலகமயமாக்கல் ஏற்பட்டமைக்கான காரணங்கள்**

✱ தொடர்பாடலில் ஏற்பட்ட முன்னேற்றம்.

✱ தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றம்.

✱ போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம்.

✱ பேரளவு உற்பத்திக்கு வழிவகுத்த சூழல்.

✱ உலக வர்த்தக அமைப்பு (WRD)உருவாக்கமும் அதன் செயற்பாடுகளும்.

**உலக மயமாக்கலினால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய நல் விளைவுகள்**

✱ பல்வேறு வகையான பொருள்கள் சேவைகளை மக்கள் நுகரலாம்.

✱ பரந்த சந்தை வாய்ப்புக் கிடைக்கும்.

✱ சர்வதேச தொடர்புகள் அதிகரிக்கும்.

✱ நாட்டின் வளங்களின் கேள்வி அதிகரிக்கும்.

✱ வெளிநாட்டு முதலீடுகள் அதிகம் வந்தடையும்.

✱ நவீன தொழில்நுட்பங்கள் வந்து சேரும்

✱ தரம் மேம்படும்.

**உலக மயமாக்கலினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்**

✱ தேசிய உற்பத்தியில் பின்னடைவு ஏற்படும்.

✱ ஏனைய நாடுகளில் தங்கியிருக்கும் தன்மை அதிகரிக்கும்.

✱ தேவையற்ற பொருள்கள் உள்நாட்டுக்குள் வந்துசேரும்.

✱ சமூக கலாசார பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.


✱ சர்வதேசப் போட்டி அதிகரிக்கும்.

✱ ஆரம்ப நிலையிலுள்ள கைத் தொழில்கள் பாதிப்படையும்.

✱ தேசிய வளங்கள் சர்வதேச வியாபாரத்திற்கு உட்படுத்தப்படும்.

✱ வீழ்ச்சியடைந்து செல்லும் சூரிய அஸ்தமனத் தொழில் நிலைமை. இது விரைவாக வீழ்ச்சியடைய நேரிடுவதால் வேலையின்மை அதிகரிக்கும்.

**யாழினி** (2008 உ/த வர்த்தகப் பிரிவு, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.)



வல்வை சிவகுரு வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் கே.அமிர்தலிங்கம் மாணவரொருவருக்குச் சின்னஞ்சூட்டுவதையும் அதிபர் ஏ.சிவநாதன் அருகில் நிற்பதையும் மாணவத் தலைவர்கள் சத்தியப் பிரமாணம் செய்வதையும் படங்களில் காணலாம். (218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சரசாலையில் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் மத்திய மருந்தகக் கட்டடத்தை யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும்-

மருந்தகப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கஜமாலா நோயாளர் ஒருவரைப் பரிசோதனை செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: குருநகர் செய்தியாளர்)*

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்: தேசிய சேமிப்புவங்கி நடைமுறைப்படுத்துகிறது

யாழ்ப்பாணம், பெப்.28

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழ்ங்கும் திட்டம் ஒன்றை தேசிய சேமிப்பு வங்கி நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளனர்.

பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தின் நன்மைகள் குறித்து விளக்கும் கலந்துரையாடல் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் எஸ். செல்வராசா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் ஓய்வூதிய திட்டத்தின் நன்மைகளைக் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு விளக்கிக் கூறினார்.

சங்கப் பணியாளர் ஒருவர் வங்கிக் கணக்கை ஆரம்பித்து மாதாந்தம் குறைந்த பட்சம் ஆயிரம் ரூபாவை வங்கியில் சேமிப்பிலிட வேண்டும்.

இவ்வாறு சேமிப்பிலிடப்படும் பணத்திற்கு ஏற்ப அவரின் 55 வயது நிறைவில் இருந்து ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படும்.

அத்துடன் மருத்துவச் செலவு உட்பட மற்றும் சிலவசதிகளை வங்கி ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதேசமயம் வங்கியின் இந்தத் திட்டத்தின் நன்மைகள் பலபணியாளர்களுக்கு கிடைப்பதால் ஓய்வூதிய திட்ட நடைமுறையில் தமது சங்கமும் இணையவுள்ளதாக பொதுமுகாமையாளர் கே. நவநீதன் தெரிவித்தார். (202-224)


### டேடன்ஸ் ஆய்வுகூட சேவை

கொழும்பு டேடன்ஸில் இரத்தப் பரிசோதனை செய்யவுள்ளோர் எதிர்வரும் வெள்ளி, சனி (29/02, 01/03) ஆகிய தினங்களில் டேடன்ஸ் மருத்துவ ஆய்வுகூடத்தில் இரத்த மாதிரிகளை கொடுக்கவும்.

514/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (71471)

டேடன்ஸ் நிர்வாகம்.
021 222 9727, 0773068122



### விமான மற்றும் பொதிகள் சேவை

யாழ் - கொழும்பு - யாழ் - EXPO AIR TICKET
எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் பொதிகள் (Parcel) கொழும்பு - யாழ். - கொழும்பு தினசரி விமானமூலமாக உடனடியாக ஏற்றி இறக்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D பெற்று உத்தரவாதத்துடன் ஏற்றி இறக்கப்படும். உங்களுக்குத் தேவையான சகல விமானப் பொருள்கள் கொழும்பிலும் யாழிலும் இருந்து கொள்வனவு செய்து தரப்படும். பூதவுடல்களும் விமானமூலமாக எடுத்துச் செல்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். அவசர தேவைகளுக்காகத் தனிவிமானம்/ஹெலிஹொப்டர் சேவைகள் ஒழுங்குசெய்து தரப்படும்.

(வி/551602)

**EURO FLIGHT AND CARGO (PVT)**

NO.35, STATION ROAD, MOUNTLAVINIA,
TEL.: 011 4542190, 077 3846998 FAX: 011 4542360

NO.11, VIHAR LANE, COLOMBO - 06
TEL.: 0114969116

NO.22, WYMAN ROAD, NALLUR, JAFFNA.
TP/FAX: 021 222 3974, 011 498327


### நிர்வாகிகள் தெரிவு

குருநகர், பெப்.28

ஊர்காவற்றுறை தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக சி.இராமச்சந்திரனும், உப தலைவராக அ.எமிலும், செயலாளராக ஞா.தர்சனும், பொருளாளராக செ.ஸ்கந்தகுமாரனும் இ.சந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். (202-51)

## சாட்டி திருத்தலத்தில் தவக்கால வழிபாடுகள்

குருநகர், பெப்.28

ஊர்காவற்றுறை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திருத்தலத்தில் தற்போது தவக்காலப் புதுப்பித்தல் தியான வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச் சிலுவைப்பாதை நடைபெறும். எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திருப்பலியும், 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும், மறுநாள் 8 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திருப்பலியும் நடைபெறும் என சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயப் பரிபாலகர் வண.பிதா. ஸ்ரனிஸ் லாஸ்பிலிப் அடிகளார் தெரிவித்தார். (202-51)

## இறையாட்சி எங்கள் மத்தியில் உள்ளது

ஓர் அலுவலகத்தில் ஒருவர் அலுவலக உதவியாளராகப் பணிக்கு அமர்த்தப்பட்டார். முதல் நாளில் இருந்தே பணிக்கு தாமதமாக வந்து ஏனோ, தானோ என்ற மனநிலையில் பணிகளைச் செய்வார். இதைப் பார்த்த அலுவலக உத்தியோகத்தர்கள் அதிகாரியிடம் முறையிட்டார்கள். அவரும் அவனை அழைத்து இனிமேலாவது சரியான நேரத்திற்கு வந்து சரியாக வேலை செய்ய வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறி அனுப்பினார். ஆனால் அவன் திருந்தின பாடில்லை. மீண்டும் அதிகாரி அவனை அழைத்து அவன் தமாதமாக வருவதற்கான காரணத்தைக் கேட்டார், அவன் ''கடிகாரத்தை'' சாட்டினான்.




அதிகாரி சொன்னார் ''முதலில் நீ உனது கடிகாரத்தை மாற்றிக்கொள், அல்லது நான் உன்னை மாற்றவேண்டி வரும்.'' அதுமுதல் அலுவலக உதவியாளரின் வாழ்வில் மாற்றம் ஏற்படலாயிற்று.

''நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஒட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா!'' (லூக் 11:20).

இறை ஆவியானவர் ஆண்டவர் இயேசுவோடு இருந்தார். எனவே இறைவன் தனது வல்லமையை ஆண்டவர் இயேசு வழியாக மனிதர் எமக்கு அருளினார். இறைத்தந்தை, ஆண்டவர் இயேசு வழியாகவே எம்மோடு பேசினார், தமது திட்டம் முழுமையையும் அவர் வழியாகவே வெளிப்படுத்தினார்.

எனவே முதலாவதாக நாம் ஆண்டவர் இயேசுவோடு நிலைத்து நிற்போம் என்றால், சக்தி பெறுவோம், வெற்றிபெறுவோம், பாவத்தை, சாத்தானை வெற்றி கொள்வோம். பிரிவினைக்கு உள்ளாக மாட்டோம், உண்மை விசுவாசத்தில் இருந்து எம்மைப் பிரிந்து கொள்ளமாட்டோம். ஆண்டவர் இயேசுவோடு இணையும்போது பாதுகாக்கப்பெறுவோம், மீட்கப் பெறுவோம்.

இரண்டாவதாக ஆண்டவர் இயேசுவை நாம் பின்பற்றும்போது, பரிகசிப்புக்கு உள்ளாக்கப்படுவோம், மற்றவர்களால் புரிந்து கொள்ளப்படமாட்டோம், எமது வாழ்வின் நோக்கம் பற்றிக் கேள்விக் கணைகளால் துன்புறுத்தப்படுவோம். எமது முயற்சிகள், திட்டங்கள் தூக்கி வீசப்படும், மற்றவர்கள் எம்மைப் பிழையாகவே பார்ப்பார்கள். நாங்கள் ஒதுக்கப்படுவோம். தட்டிக்கொடுப்பான வார்த்தைகளுக்குப் பதில் கிண்டல்களுக்கு உள்ளாவோம்.

இங்கே தான் நான் நினைவு கூரவேண்டும். நாம் இறைவனுக்காக பணிபுரிகின்றோம். இறைவனின் திருவுளத்தை அறிந்து அதை எடுத்துச் செல்ல வேண்டும். ''இறையாட்சி'' எங்கள் மத்தியில் உள்ளது என்பதே துணிந்து பறைசாற்ற வேண்டும். ''என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கின்றார். என்னோடு இணைந்து மக்களை கூட்டிச் சேர்க்காதவர் அவர்களை சிதறடிக்கிறார்.''

ஏகோ.துரை.


### 5ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
செல்லர் சின்னத்துரை

பிறப்பு 12.06.1951

இறப்பு 24.02.2003



திதி:28.02.2008

அறிவின் ஆசானாய் அன்பின் கணவனாய்
பாசத்தின் தந்தையாய் பண்பின் மாமனாய்
கருணையின் பேரனாய் கம்பீரமாக எமைக்காத்த தெய்வமே அப்பா!
ஆண்டுகள் எத்தனை ஆனாலும் சரி
உங்கள் நினைவுகளுடன்தான் வாழ்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்
மகன்- சுதாகரன்
(லண்டன்).

நாச்சிமார் கோயிலடி,
கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறை. (71352)



### நினைவலைகள்

8ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு முதலாம் ஆண்டு





அமரர் முத்துக்குமாரு இராசரத்தினம்
தோற்றம்: 27.09.1927 மறைவு: 18.02.2000

அமரர் கந்தையா குமாரசாமி
தோற்றம்: 26.12.1926 மறைவு: 08.02.2007

திருமதி கந்தையா சரஸ்வதிப்பிள்ளை
தோற்றம்: 04.02.1909 மறைவு:11.03.2007

திதி:28.02.2008

பண்புடன் வாழ்ந்து சுற்றம் பேணி
வையத்தில் நாம் நிமிர வழிகாட்டிய ஒளி விளக்குகளே!
உங்கள் நினைவில் நனைகின்றோம் நாம் தினமும்.....

சித்தன்கேணி. (71453) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் மூலம் தமிழரை அடக்க அரசு முயலுமானால் சர்வதேச ஆதரவு அந்த மக்கள் பக்கமே திரும்பும்!

## எச்சரிக்கிறார் முன்னாள் இந்தியப் புலனாய்வு அதிகாரி ஹரிகரன்



யுத்தத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, சிங்கள மேலாதிக்க உணர்வு காரணமாகத் தமிழர்களை அடக்குவதற்கும் தனிமைப்படுத்துவதற்கும் இலங்கை அரசு முயலுமானால் சர்வதேச ஆதரவு தமிழ் மக்கள் பக்கம் திரும்பும். இதற்கு கொசோவோ அவசியமில்லை.

கொழும்பு,பெப்.28

இலங்கை அரசு சிங்கள மேலாதிக்க உணர்வு காரணமாக யுத்தத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தித் தமிழ் மக்களை அடக்குவதற்கு முயன்றால் சர்வதேச உணர்வு இயல்பாகவே தமிழ் மக்கள் பக்கம் திரும்புமென இந்திய அமைதிப் படை காலத்தில் இலங்கையில் பணியாற்றிய முன்னாள் இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரி கேணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

கொசோவோவின் சுதந்திரப் பிரகடனம் விடுதலைப் புலிகள் போன்ற தனிநாட்டிற்காகப் போராடும் கெரில்லா இயக்கங்கள் மீது எத்தகைய செல்வாக்கைச் செலுத்தும் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளும், தமிழ் அரசியல்வாதிகளும் முன்வைக்கும் தமிழீழக் கோரிக்கையிலிருந்து கொசோவோவின் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் முற்றிலும் மாறுபட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பால்க்கன் பிராந்தியத்தின் சேர்பியர்கள், குரோசியர்கள், அல்பேனியர்கள் போன்றவர்கள் மத்தியில் மத, கலாசார, மொழி வேறுபாடுகள் காணப்பட்டன. உலக வல்லரசுகள் தமது நோக்கங்களை அடைவதற்கு இதனைப் பயன்படுத்தின. கொசோவோவின் சுதந்திரமும் இதன் வெளிப்பாடே எனத் தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது:-

கொசோவோவின் ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் ஏனைய கிளர்ச்சிக் குழுக்களின் தலைவிதியை எவ்வாறு தீர்மானிக்கும் என்பதை எதிர்வு கூறுவது கடினமானது. ஏனெனில், அவை வித்தியாசமான நிகழ்ச்சி நிரலையும், பின்னணியையும், நடவடிக்கைச் சூழலையும் கொண்டுள்ளன.

குர்திஷ் கிளர்ச்சி அங்கு ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளை உள்ளடக்கிய தன்மையைக் கொண்டது.

பாகிஸ்தானின் பலூச்சிஸ்தானில் பிரதேச பழங்குடி நெருக்கடிகள் காணப்படுகின்றன.

காஷ்மீரில் செயற்படும் அநேக குழுக்களும் சுதந்திரத்தைத் தமது இலக்காகக் கொண்டிருக்கவில்லை.

இது விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கும் பொருந்தும்.

தமிழர்களும் சிங்களவர்களும் நீண்ட காலமாக ஒன்றாக வாழ்ந்தவர்கள். 1973 வரை தமிழ்த் தாயகத்தை உருவாக்குவதற்கான கிளர்ச்சியெதுவும் காணப்படவில்லை.

அவ்வாறு காணப்பட்டிருந்தால் நீண்ட காலத்திற்கு முன்னரே இலங்கையின் சில பகுதிகளையும், இந்தியாவின் சில பகுதிகளையும் உள்ளடக்கி தமிழர்கள் தனிநாட்டை உருவாக்கியிருப்பார்கள்.

கொசோவோவின் சுதந்திரத்திற்கு அல்பேனியர்களின் போராட்டம் மாத்திரமல்லாது மேற்குலகின் ஆதரவும் முக்கிய காரணம்.

### யுத்தத்தை அரசு கையாள்வதைப் பொறுத்ததே

இலங்கை அரசு தற்போதைய யுத்தத்தை எவ்வாறு கையாள்கிறது என்பதே அனைத்தையும் தீர்மானிக்கும் விவகாரமாகும்.

யுத்தத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, சிங்கள மேலாதிக்க உணர்வு காரணமாகத் தமிழர்களை அடக்குவதற்கும் தனிமைப்படுத்துவதற்கும் இலங்கை அரசு முயலுமானால் சர்வதேச ஆதரவு தமிழ் மக்கள் பக்கம் திரும்பும். இதற்கு கொசோவோ அவசியமில்லை.

அடுத்ததாக சர்வதேச சட்டங்கள் -' தேர்ந்தெடுக்கப்பட்ட முறைகளில் - பலவீனமான தேசங்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றன.

இவை அநேகமாக நாடுகளின் அதிகாரப் போட்டியின்போது கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. கொசோவோவில் இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மனித உரிமை சாதனைகள் பரிசுத்தமானவையல்ல. எனினும், இதே மனித உரிமை குற்றச்சாட்டுகளைச் சுமத்தியே சேர்பியா மீது உலக நாடுகள் தமது விருப்பத்தினைத் திணித்தன.

இதற்குக் காரணம் அமெரிக்காவில் வெளிப்படையான ஆட்சி முறையுள்ளதும், சேர்பியாவில் அவ்வாறு காணப்படாதது மேயாகும். இதன் காரணமாகவே சேர்பியாவிற்கு பல நண்பர்கள் காணப்படவில்லை. - என்றார் அவர். (உ)

## இலக்கியப் போட்டிகளில் வலி.மேற்கைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.28

கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலக்கியப் போட்டிகளில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாணவர்களையும் பொதுமக்களையும் பங்குபற்றுமாறு பிரதேச செயலர் திருமதி ரி.பாபு அறிவித்துள்ளார்.

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை மாணவர்கள் தமது பாடசாலைகளிலும் பொதுமக்கள் தத்தம் பிரிவு கிராம சேவையாளர்களிடம் பெற்று, தமது ஆக்கங்களை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பாக 'கலாசாரப் பிரிவு, பிரதேச செயலகம், வலிகாமம் மேற்கு, சங்கானை' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(202-29)



மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளை - பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளுக்கு ரூபா 500 பெறுமதியான சேமிப்பு சான்றிதழ்கள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. எம்.எஸ்.எவ். வைத்தியக் குழுவைச் சார்ந்த ஜப்பானிய வைத்திய நிபுணர் தாய் ஒருவருக்கு சான்றிதழைக் கையளிப்பதை முதலாவது படத்திலும்-
கிளை அலுவலர் திருமதி விமலேந்திரன் குழந்தையின் தாயாருக்குச் சான்றிதழைக் கையளிக்கும் போது அருகில் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். (160)

# இடம்பெயர்ந்து மீளக்குடியேறுவோருக்கு தேவையான உதவிகளை ஐ.நா. வழங்கும்

கொழும்பு,பெப்.28

இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பார் என ஐக்கிய நாடுகளின் உதவிச் செயலாளர் அங்கொலா கனே மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிஷாத் பதியுதீனிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைவரங்களை அறிந்துகொள்ளும் வகையில் இங்கு வந்துள்ள ஐக்கிய நாடுகள் உதவிச் செயலாளர் அங்கெலா கனே மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை நேற்றுமுன்தினம் அவரது அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார். அவ்வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

போர்ச்சூழல் மற்றும் ஏனைய காரணங்களால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளவர்கள் இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர், அயலவர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர். இவ்வாறு தங்கியுள்ளவர்களை மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு அவர்களது சொந்தப் பிரதேசங்களில் துரிதமாக மீள்குடியேற்றி அவர்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் ஏனைய உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இந்த நிலைமைகள் குறித்து இங்கு கருத்துத் தெரிவித்த உதவிச் செயலாளர் அங்கொலா கனே இலங்கை அரசு இடம்பெயர்ந்த மக்களை சர்வதேச சட்டங்களுக்கமைய மீள்குடியேற்றி வருவதையிட்டு தாம் பூரண திருப்தியடைகிறார் எனவும் மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

ஐ.நா இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்தில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வருகிறது இதற்காக அனைத்து உதவிகளையும் தாம் ஏற்பாடு செய்து தருவார் எனவும் உறுதி வழங்கினார்.

வடமாகாணத்தின் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் புத்தளம் உட்பட பல மாவட்டங்களில் முகாம்களிலும் உறவினர் அயலவர்களின் வீடுகளிலும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களையும் அவர்களது சொந்தப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்ய வேண்டியிருக்கிறது. அதுவரைக்கும் அவர்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுத் தருமாறும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் ஐ.நாவின் உதவிச் செயலாளரிடம் கேட்டுக்கொண்டார் -எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## நாரந்தனையில் சென்.பீற்றர்ஸ் வீதி புனரமைப்பு

நல்லூர்,பெப்.28

ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் சென்.பீற்றர்ஸ் வீதிக்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவ்வீதிப் புனரமைப்புக்கென 9.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

680 மீற்றர் நீளமான மேற்படி வீதி சிமெந்து, கொங்கிறீட் கற்களால் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(111)

## கூட்டுறவுக் கிளைகளில் உருளைக்கிழங்கு, வெங்காயம் நிர்ணய விலையில் விற்பனை

குருநகர்,பெப்.28

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் (பம்பாய்) ஆகியவை தற்போது விற்பனைக்கு வந்துள்ளன.

உருளைக்கிழங்கு கிலோ ரூபா 120 ஆகவும் பெரிய வெங்காயம் கிலோ ரூபா 75ஆகவும் விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. (202-51)

# நிலைமை சீரான பின்னர் குடாக்கடலில் மீன்பிடிக்கும் எல்லை விஸ்தரிக்கப்படும்

## யாழ். இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.28

பாதுகாப்பு நிலைமைகள் சீரடைந்த பின்னர் குடாக்கடலில் மீன் பிடிப்பதற்கான எல்லையை அதிகரித்து அதிக எண்ணிக்கையான மீனவர்களுக்கு தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக கடந்த திங்கட்கிழமை சந்திப்பொன்று பலாலியில் இடம்பெற்றது.

இதில் பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

அச்சந்திப்பு தொடர்பாக பலாலி பாதுகாப்புத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு :

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை பிரதேசங்களின் மீனவர்கள் கடற்றொழில் மேற்கொள்வதில் முகம்கொடுக்கும் சிரமங்கள் பற்றியும் பாதுகாப்புப் படைகளின் தளபதி கவனம் செலுத்தியதுடன், அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தற்போது மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ள எல்லையை அதிகரித்து கூடுதலான மீனவர்களுக்கு மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள பிரதேசத்தில் பாதுகாப்பு நிலைமைகள் சீரடைந்த உடனேயே அனுமதியளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### வாகனத் தொடரணிக்கு மாற்று ஏற்பாடுகள்

இராணுவ வாகனத் தொடரணி செல்லும்போது பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் முகம்கொடுக்கும் பிரச்சினை களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த நேரங்களில் மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டதுடன், கடந்த க.பொ.த. உ/த பரீட்சையில் திறமையான முறையில் சித்தியடைந்த மாணவர்களின் பாடசாலைகளுக்கு 50 கணனிகளை அன்பளிப்புச் செய்வதற்கும் ஆவண செய்யப்பட்டிருப்பதாக யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதியால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 'யுனிசெவ்' நிறுவனத்தினால் 2008 கல்வி ஆண்டுக்காக அனைத்து பாடசாலைகளுக்கும் பாடசாலை உபகரணங்களும் புத்தகங்களும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இராணுவத்தின் அனுசரணையில் கடுமையான நோய்வாய்ப்பட்டவர்களை மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லும்போது வைத்தியர் ஒருவருடன் நோயாளியின் உதவிக்காக வயது முதிர்ந்தஒருவர் குடும்ப உறுப்பினராகச் செல்லமுடியும் என்றும் படைகளின் தளபதி தெரிவித்தார்.

யாழ்.பிரதேசத்தில் உணவு விநியோகத்தைச் சீராக மேற்கொள்ளவும் அத்தியாவசியச் சேவைகளை மேற்கொள்ளவும் தேவையான முழு ஒத்துழைப்பை தொடர்ந்தும் வழங்குவதாகவும் பொதுமக்களின் அன்றாடத் தேவைகளை எவ்வித தடைகளுமின்றி மேற்கொள்ள அனைவரும் ஒத்துழைக்குமாறும் தெரிவித்த பாதுகாப்புப் படைகளின் தளபதி கூட்டத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். (அ-1-202)

*(இச்செய்திக் குறிப்பின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப[illegible] ஆசனங்களின் கீழும், தட்டிலும் ப[illegible]ணப் பொதிகளை வைக்கத் தடை

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, பெப்.28

பஸ்ஸின் ஆசனங்களின் கீழ்ப் பகுதியிலும், பயணப் பொதிவைக்கும் மேல்தட்டிலும் பயணிகள் பொதிகள் வைப்பதற்கு நேற்றுமுதல் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் இதுவிடயமாக மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

குண்டுகளில் இருந்து எச்சரிக்கையாக இருப்பது மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்தும் பஸ் பயணிகளைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தனியார் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது - என்றார். (உ)

# நெடுந்தீவில் பிடிக்கப்படும் நல்லரக மீன்வகைகளை முதலில் பிரதேசத்தில் விற்பனை செய்யக் கோரிக்கை

நல்லூர், பெப்.28

நெடுந்தீவில் பிடிக்கப்படும் மீன்களில் பிரதே[illegible]க்களுக்கு விற்பனை செய்து மீதமாக உள்ளவற்றையே ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என பிரதேச சபையிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நெடுந்தீவு மீனவர்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் தொழில்வளர்ச்சிக்கென உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பிடிக்கப்படும் மீன்களை குறிப்பாக நல்லரக மீன்களை மீனவர்கள் உள்ளூர் மக்களுக்கு விற்பனை செய்யாது வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லும் வியாபாரிகளுக்கு வழங்குகிறார்கள். இதனால் இங்கு கிடைக்கக்கூடிய நல்லரக மீன்களை நுகர்வோர் தமக்குத் தேவையான அளவில் வாங்கமுடியாத நிலை உள்ளது.

மீனவர்களும் வியாபாரிகளும் தங்கள் வசமுள்ள மீன்களை முதலில் இங்குள்ள மீன் சந்தைக்கு விற்பனைக்காக எடுத்து வந்து பாவனையாளர்களுக்கு கிடைக்கக் கூடிய ஒழுங்குகளைக் கையாண்ட பின்னர் மீதியை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்ல பிரதேசசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்- கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குமுதினி அரசபடகில் விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படும் மீன்கள் ஏற்றப்படுவதை கண்டிப்பாகத் தடைசெய்ய வேண்டும் எனவும்-

கடற்றொழிலாளர் சங்கமும் நல்ல தரமான மீன்கள் கிடைப்பதற்கான நடைமுறைகளை ஏற்படுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கோருகிறார்கள். (202-111)

## அபிவிருத்தி உதவியாளர்களுக்கு வினைத்திறன்காண் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் மனிதவள அபிவிருத்தி உதவியாளர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நுகேகொட சென்.யோசப் பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து நால்வர் தோற்றவுள்ளனர். எஸ்.ஸ்ரீசக்திவேல் (நல்லூர் பிரதேச செயலகம்), ரி.தவபாக்கியராசா (யாழ்.பிரதேச செயலகம்), ஆர்.ஆர்.பொன்னம்பலம் (தெல்லிப்பழை பிரதேச செயலகம்), எஸ். சிவகுமார் (யாழ். பிரதேச செயலகம்) ஆகியோர் யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றவுள்ள பரீட்சார்த்திகளாவார்.

அவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய தொழிற்கல்வி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (202)

# கல்வி நிர்வாக சேவையில் மேலும் 400 பேர் நியமனம்

அச்சுவேலி, பெப்.28

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III சேவையில் மேலும் 400 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இவர்களுக்கான நியமனங்கள் இந்த வருடம் நடுப்பகுதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்பதற்காக நடததப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, திறந்த போட்டிப் பரீட்சை ஆகியவற்றில் பெற்றுக்கொண்ட உயர்புள்ளி அடிப்படையில் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்விச் சேவையில் உள்ளவர்கள் மட்டும் தோற்றிய ''மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை'' க்கு தோற்றியவர்களில் இருந்து மேலும் 76 பேரும் -

அனைத்து அரசாங்க ஊழியர்களும் தோறறக்கூடிய "திறந்த போட்டிப் பரீட்சை" பெறுபேறுகளின் அடிப்படையில் 324 பேரும் நியமிக்கப்படவுள்ளனர். (202-11)

# அசூசையும் அகங்காரமும் மனிதத் தன்மையை அழிக்கும்

தற்கால மனிதர்கள் பக்தியினையும்சரணாகதியினையும் வெளிப்படுத்திக் கொள்கிறார்களே தவிர அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து பயிற்சி செய்து உள்ளே சொந்தமாக அனுபவிப்பதில்லை. தற்போது ஆன்மீகம் என்பது வெளிச் செயலாக வெளிப்படுகின்றதே தவிர உள்ளனுபவமாக உணரப்படுவதில்லை. உண்மையான ஆன்மீகம் எது? பஜனைகள் புரிவதா? சாயிராம் சாயிராம் என்று கூறுவதா? ஷேத் திராடனங்கள் செய்வதா? இவையெல்லாம் மனிதனின் பலவீனத்தில் எழுந்தவை ஆகும். உண்மையான ஆன்மீகம் என்பது எது? மனிதனிடம் உள்ள விலங்குத் தன்மையினை வேர் மூலத்துடன் அழித்தலே ஆன்மீகமாகும்.

அ[illegible]ள்ள தெய்வீகத் தன்மையானது வெளிப்படும்படி செய்வதே உண்மையான ஆன்மீகமாகும்.

இ[illegible] நாட்டில் தியானம் செய்கிறார்கள், ஜபம் செய்கிறார்கள் ஆனால் விலங்குத் தன்மையினையும் வளர்த்துக் கொண்டே இருக்கிறார்கள். விலங்குத் தன்மையினை வளர்த்துக் கொண்டு எத்தகைய சாதனா மார்க்கத்தில் ஈடுபட்டாலும் அது வியர்த்தமேயாகும். இத்தகைய சாதனா மார்க்கங்கள் தெய்வீகத்தினையே கூட மோசஞ் செய்பவையாகும். நம்முடைய துஷ்டபுத்தி, அநியாய, அக்கிரம, அநாசார அசத்ய, அகங்காராதி புத்திகளை நம்மிடமிருந்து முழுமையாக விரட்ட வேண்டும். அதுவே உண்மையான ஆத்மீகம் ஆகும். அசூசையும் அகங்காரமுமே கடவுளை நம்மிடமிருந்து விலக்கி வைக்கக்கூடியவை ஆகும். இவை இரண்டும் மனித வாழ்க்கை என்ற மரத்தின் வேரினையும் அடிப் பாகத்தினையும் அரிக்கும் பூச்சி களாகும். இவை மனிதத் தன்மையை முழுதும் அழிக்கக் கூடியவையாகும். இவற்றை வைத்துள்ளவன் மனிதனேயல்ல. இவற்றுடன் கூடியிருக்கும் போது ஆன்மீகத்தைப் பற்றிப்பேச என்ன இருக்கிறது.



சாயி சிந்தனை

# நிகழ்வுகள்... நிகழ்வுகள்...



சமுகசேவைகள் அமைச்சினால் கோப்பாய் பிரதேசத்தில் நடத்தப்பட்டு வரும் தொழிற் பயிற்சி நெறிக்கான ஆரம்பவிழா அண்மையில் கோப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும் பயிற்சி நிலையத்திற்கு பொறுப்பான அபிவிருத்தி உதவியாளர் எ.யேசுதாஸ், சமுகசேவைகள் உத்தியோகத்தர் வி.தபேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர்எஸ்.மகேந்திரன், நிர்வா கிராம அலுவர் எஸ்.சிவராசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (224)




இலங்கை மெதடிஸ்த திருச்சபையால் திக்கம் ''மெதடிஸ்தநகர்'' வீட்டுத்திட்டத்தில் சிறுவர் நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட இலங்கை மெதடிஸ்த திருச்சபை கட்டைவேலி நெல்லியடி முகா மைக்குரு அருட்திரு டி.அழகராசா அடிகளார், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை திருச்சபைக் குரு அருட்திரு என்.அருள்நாதன் அடிகளார் ஆகியோர் வரவேற் கப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: 218)



புலம்பெயர் பழைய மாணவர்களால் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு மேலும் ஒரு காணி கொள்வனவு செய்து வழங்கப்பட்டது.

அதற்கான உறுதியை டாக்டர் த.கைலாயர் வித்தியாலய உபஅதிபர் இ.அருணகிரி வாசனிடமும், பழைய மாணவவர் சி.புவேந்திரனிடமும் வழங்குவதைக் காணலாம். அருகில் நலன்விரும்பியும் வழக்கறிஞருமாகிய பொன்னம்பலம் காணப்படுகின்றார். (202)



நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாயின் புதிர்விழாவும் பரிசில் விழாவும் உபதலைவர் கோ.ஜீவபாலன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (202)



நியாப்-II திட்டத்தின் கீழ் 31 பயனாளிகளுக்கு சுயதொழிலுக்கென 30 ஆயிரம் ரூபா விதம் வழங்கப்பட்டது.

நயினாதீவு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவி திருமதி மகேஷ்வரன் சத்தியேஸ்வரி பயனாளி ஒருவருக்கு உதவித் தொகை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: ரமேஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேச கருத்தியலை உள்வாங்கி தன்னை நெறிப்படுத்துமா கொழும்பு?

ஆபத்துக்குள்ளான மக்களின் நிலைமை குறித்து சர்வதேச ரீதியில் ஆய்வு நடத்திவரும் - லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் - சிறுபான்மையினருக்கான உரிமைக்குழு, ஆசியப் பிராந்தியத்தில் மனித உரிமைகள் மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் நாடுகளில் இலங்கை முன்னிலை வகிக்கின்றது என்பதை அடையாளம் கண்டிருக்கின்றது.

ஆப்கானிஸ்தானிலும், பர்மாவிலும் நிலைமை மிகமிக மோசம் எனத் தெரிவித்திருக்கும் அந்த அமைப்பு, புதுவருடத்துடன் இலங்கையில் நிலைமை கிடுகிடுவென சீரழிந்து மிகமிக மோசமான கட்டத்தை அடைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

''பாகிஸ்தானிலும், இலங்கையிலுமே கள நிலைமைகள் குறிப்பிடத்தக்களவு சீர்கெட்டுள்ளன. 2007 உடன் ஒப்பிடுகையில் மிக வேகமாக சீரழிவை அடைந்த நாடுகளில் இவை இரண்டுமே முன்னிலை வகிக்கின்றன'' என்றும் அந்த அமைப்புத் தெரிவித்திருக்கின்றது.

''யுத்தம் மீள மூண்டதாலும், சட்டம் - ஒழுங்கு நிலைமை சீர்குலைந்ததாலும் இலங்கை 2007 இல் மிக மோசமான மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்கொண்டது. படுகொலைகள், காணாமற்போதல், சித்திரவதை போன்ற - பெரும்பாலும் அனைத்து - மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களின்போதும் தமிழர்கள் அல்லது முஸ்லிம்களே அதிகளவில் பாதிக்கப்பட்டனர்.'' - என்று மேற்படி சிறுபான்மையினருக்கான மனித உரிமைக் குழுவின் நிறைவேற்று இயக்குநர் மார்க் லற்றிமர் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமை அமைப்புகள், அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், லண்டனை மையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, ஹொங்கொங்கைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவற்றின் வரிசையில், இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான வண்டவாளத்தை அம்பலப்படுத்துகின்ற பணியில் இப்போது சிறுபான்மையினருக்கான உரிமைகள் குழுவும் (Minority Rights Group) இணைந்து கொண்டிருக்கின்றது.

பாதுகாப்பற்ற - சிறுபான்மையினரான - தமிழ்ச் சமூகத்தின் மீது பெரும்பான்மையினரான பௌத்த, சிங்கள மேலாதிக்கப் போக்கு ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டு, இன அழிப்பு வன்முறை, வரன்முறை தாண்டி கொடூரப் பேரழிவுப் போராகப் பரிணமித்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் -

ஒருபுறம், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்புகளின் பார்வையும், சிரத்தையும், அவதானமும் இலங்கையின் பக்கம் திரும்பியிருக்கின்றன. உண்மை நிலைமையை அவை அப்பட்டமாக அம்பலப்படுத்தி வருகின்றன.

மறுபுறம், இத்தகைய இன அழிப்பு வன்முறை குரூரமாகவும், கொடூரமாகவும் இடம்பெறும் பிராந்தியங்களில் சர்வதேசம் கண்ணை மூடிக்கொண்டு பார்த்திராது, சர்வதேச வழக்காறுகள் மற்றும் பண்பியல்புகளை மீறி அத்தகைய மனிதப் பேரவல விவகாரங்களில் மனித நேய அணுகுமுறையோடு அவை உறுதியாகத் தலையிடும் என்ற நிதரிசனம் கொசோவோ தனிநாட்டுப் பிரகடனத்தை ஊக்குவித்து, அங்கீகரித்த மேற்குலகின் தந்திரோபாயச் செயற்பாடுமூலம் பகிரங்கமாகக் கட்டவிழ்ந்திருக்கின்றது.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் பின்புல ஆதரவோடும் ஊக்குவிப்போடும் முன்னெடுக்கப்படும் இன அழிப்புக் கொடூரத்தை, ஒரு நாட்டின் உள்விவகாரம் என்று கருதி ஒதுங்கி நிற்கும் கருத்து நிலைப்பாட்டை சர்வதேசம் துறந்து விட்டது என்ற யதார்த்தம் மெல்லப் புரியத் தொடங்கியதால் இப்போது பதறியடிக்கின்றது கொழும்பு.

தமிழர் தாயகம் மீது ஏவி விடப்பட்ட கொடூர யுத்தம் இப்போது மந்த கதிக்குத் திரும்பியிருப்பதும் -

'பேச்சு மூலமான தீர்வு', 'அதிகாரப் பகிர்வு', 'இராணுவ வழித் தீர்வு மார்க்கமல்ல' - என்ற அறிவிப்புகள் கொழும்பின் பக்கத்திலிருந்து வெளியிடப்படுவதும் -

இனப்பிரச்சினைக்கான அமைதித் தீர்வு குறித்துப் பேசி முடிவெடுப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவருக்கு அவசரமாக அழைப்பு விடுத்து அவரை ஜனாதிபதி சந்தித்துப் பேசுவதும் -

சர்வதேசப் பின்புலத்தில் மாறிவரும் கருத்து நிலைப்பாட்டால் அசைக்கப்பட்ட கொழும்பு, அதனால் வெளிப்படுத்தும் பிரதிபலிப்புகளே.

ஈவிரக்கமற்ற இனவாத அரசு ஒன்று, சில அந்நிய சக்திகளின் பின்புல ஆதரவுடன் தமிழர் தேசத்தின் மீது மிகக் கொடூர யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்டு, இனப் பேரழிவு ஒன்றுக்குக் கங்கணம் கட்டி நிற்கையில், அதைத் தடுத்து நிறுத்தும் தார்மீக அறநெறிக் கடப்பாடு தனக்கு இருப்பதாகக் கருதி சர்வதேசம் அது குறித்து கருத்துகளை வெளியிட்டு வருகின்றது.

இந்திய அரசின் கொள்கை நிலைப்பாட்டை விளக்கும் வகையில் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அந்த நாட்டின் ஜனாதிபதி அண்மையில் நிகழ்த்திய உரை வரை, சர்வதேசத்தின் பல மட்டங்களில் இலங்கை குறித்துத் தெரிவிக்கப்படும் கருத்துகள் இலங்கை தொடர்பான சர்வதேசத்தின் இக்கரிசனையையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

சர்வதேசத்தின் இந்த உறுதியான நிலைப்பாடு கொழும்பை சரியான வழியில் செயற்பட வழிப்படுத்துமா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# சகல அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகளும் கணனிமயப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், பெப்.28

அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் சமூகநலத் திட்டங்களை மேலும் முன்னேற்றும் நோக்குடன் அந்நிறுவனங்களின் செயற்பாடுகள் அனைத்தும் கணனிமயப் படுத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலம் சமூகத்திற்குக் கிட்டக்கூடிய பணிகளை மேலும் முன்னேற்றுவதற்கும் அந்நிறுவனங்களுக்கு நல்லதொரு நிர்வாகக் கட்டமைப்பை வழங்குவதற்கும் அதேநேரம் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் நிகழக்கூடிய முறைகேடுகள் மற்றும் வீண் விரயங்களைக் கட்டுப்படுத்துவதற்குமென அந்நிறுவனங்களின் செயற்பாடுகள் கணனிமயப்படுத்தப்படவுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவுசெய்யும் செயலகத்தின் செயற்பாடுகளையும் அப்பிரிவினையும் கணனிமயப்படுத்துவதற்காக 'வேள்ட் விஷன்' நிறுவனம் உட்பட மேலும் சில அரச சார்பற்ற நிறுவனங்களால் கணனித் தொகுதிகள் நேற்றுமுன்தினம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனப் பிரிவின் பதிவுகள், மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் விஸா அனுமதிப்பத்திரம் உட்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்யும் செயலகத்தினால் கணனிமய விவரக்கோவை ஒன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் உரிய ஏனைய நிறுவனங்கள் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நேரடிச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற அனைத்து நிறுவனங்களும் மேற்படி கணனி விவரக் கோவைக் கட்டமைப்புடன் ஒன்றோடொன்று இணைக்கப்படுகிறது - என்றுள்ளது. (202)

# குழாய்நீர் விநியோகம் மூலம் பெறும் நீரை பொதுமக்கள் வீண்விரயம் செய்கின்றனர்

நல்லூர்,பெப்.28

யாழ்.மாநகர சபைக்குள் குழாய்நீர் விநியோகம் மூலம் குடிதண்ணீர் பெறும் பொதுமக்கள் அவற்றை வீண்விரயம் செய்கின்றனர். இதனால் விநியோக நடவடிக்கைகளில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

குழாய்நீரைப் பயன்படுத்திப் பூக்கன்றுகளை வளர்ப்பதிலும் வாகனங்களைக் கழுவுவதிலும் அநேகர் ஈடுபடுகின்றனர். பொதுமக்களுக்கு சீரான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதால் மாநகர பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் நீர் விநி யோகத்தை உரிய முறையில் செயற் படுத்தி வருகின்றது.

15 குடும்பத்திற்கு நீர் விநியோகக் குழாய் வசதி என்ற அடிப்படையில் விநியோகக் குழாய்கள் உள்ளன. இந்தச் சேவைக்காலத்தில் பாவனையாளருக்கு பெரும் கஷ்டங்கள் ஏற்படாத வகையில் நாள் ஒன்றிற்கு ஒரு குடும்பத்திற்கு ரூபா ஒன்று மட்டுமே அறவிடப்படுகின்றது. இதற்காக 15 குடும்பங்களைக் கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் குழுக்கள் அமைக்கப்பட்டு 30 ரூபா மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திடமிருந்து அறவிட்டு மாநகர சபையில் செலுத்தும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மிகவும் குறைந்த கட்டண அறவீட்டைச் செய்தபோதும் அந்தத் தொகையைச் செலுத்த மக்கள் முன்வருகின்றார்கள் இல்லை. மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கவேண்டும். குழாய்நீர் விநியோகத்திற்கென மாநகர சபை பெருந்தொகையைச் செலவிட்டபோதும் பொதுமக்களிடம் அறவிடுவது மிகவும் சொற்பமான தொகையே.

தண்ணீர் விநியோகம் சில இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளது. இது ஒரு தற்காலிக நடவடிக்கையே. பாவனையாளர்கள் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு தமக்குரிய கட்டணத்தைச் செலுத்த முன்வருவதுடன் சம்பந்தப்பட்ட குழுக்களும் பொறுப்புடன் இயங்கி மாநகர சபைக்கு முழுத் தொகையும் வழங்கவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-111)

## பெண் சாதனையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம்,பெப்.28

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பெண் சாதனையாளர்களைக் கௌரவிக்கவுள்ளது.

கல்வி, கலை, இலக்கியம், பொருளாதாரம், விளையாட்டு, தொழில் நுட்பம், தலைமைத்துவம், வீரசாகசம் ஆகிய பல்துறைகளிலும் சாதனை நிகழ்த்திய பெண்களே கௌரவிக்கப் படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் திணைக்களப் பணிப்பாளரால் கோரப் பட்டுள்ளன.

நல்லூர் பிரதேசத்தில் வசிக்கும் சாதனையாளர்கள் நல்லூர் பிரதேச செயலக கலாசார நிகழ்ச்சித் திட்ட உதவியாளருடன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பங்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பதில் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் கேட்டுள்ளார். (202)

## யாழ். பல்கலையில் பொதுவிரிவுரைத் தொடர்

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு என்னும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர் II எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மருத்துவ பீடாதிபதி க.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.எஸ்.யமுனானந்தா ''நான் காசநோயை நிறுத்துகிறேன்'' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார்.

நிகழ்வின் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நிகழ்த்துவார்.

## இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை கணனி வலைப்பின்னல் சேவையில்

யாழ்ப்பாணம்,பெப்.28

வேலணை, வங்களாவடியில் இயங்கிவரும் இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையும் கணனி வலைப்பின்னலுடன் இணைக்கப் படவுள்ளது.

இதன் ஆரம்பவிழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் ந.சீவரட்ணம் கலந்துகொள்வார்.

இலங்கை வங்கியின் கணனி வலைப்பின்னலுடன் இணைந்துகொள்ளும் 300ஆவது கிளை இது என்பது குறிப்பிடத்தக்கது. (202)

# தொழிலாளர் குழுவின் பொறுப்பற்ற போக்கால் கப்பல் கம்பனிக்கு நட்டம் செலுத்தும் நிலைமை

## தொடர்ந்து பணிக்கமர்த்த முடியாதென அரச அதிபர் அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.28

கடந்தவாரம் கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்காக அனுப்பிவைக்கப்பட்ட குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர் குழு பொறுப்பற்ற விதமாகவும் அசமந்தமாகவும் நடந்துகொண்டு பணியை இடைநிறுத்தி வீடுகளுக்குத் திரும்பியுள்ளது. இதனால் ஏற்பட்ட காலதாமதத்திற்காக கப்பல் கம்பனிக்கு 15 லட்சம் ரூபா நட்டம் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரச அதிபர் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்தி சங்கம் தமது அங்கத்தவர்கள் தொழில் வாய்ப்புகள் இன்மையால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டு தமது நாளாந்த வருமானத்தை பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் உள்ளதால் தற்போது துறைமுகத்தில் பொருள்களை இறக்கி ஏற்றும் பணிக்கு தங்களையும் இணைத்துக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டுக்கொண்டதற்கு அமைவாக அவர்கள் காங்கேசன்துறை, மயிலிட்டி துறைமுகங்களில் கப்பலில் பொருள்களை இறக்கி ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்று குறிப்பிட்டுள்ள அரச அதிபர் -

மிகவும் முக்கியமான பணிக்கு என அனுப்பப்பட்ட தொழிலாளர் அணி தமது அங்கத்தவர்களின் சங்கத்தின் மாவட்ட மக்களின் நலன்களை கவனத்தில்கொள்ளாது பொறுப்பற்ற விதத்தில் அசமந்தப் போக்குடன் நடந்து கொண்ட இத்தொழிலாளர்குழுவை தொடர்ந்து இப்பணிக்கு அமர்த்த முடியாதநிலை மாவட்ட செயலகத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் அச்சங்கத்தினருக்கும் அங்கத்தவர்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் நிவாரண நடவடிக்கை எடுக்கமுடியாமல் போனமைக்கும் இக்குழுவின் செயற்பாடே காரணம் எனவும் இதற்கு யாழ். மாவட்டச் செயலகம் மனவருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது என்று மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

(ப)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 17 | 29.02.2008 வெள்ளிக்கிழமை |
| திதி : அட்டமி | மு.இ. 08.13 வரை |
| நட்சத்திரம் : | அனுஷம் |
| | [illegible] 03.48 வரை |
| [illegible] : | [illegible] |
| ராகுகாலம் : | 10.58 -12.28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

பாடசாலையின் கடமையும், கண்ணியமும்மிக்க
கணித ஆசான் திரு.சி.தேவகுமார்
அவர்களின் பாசமிகு அன்னை

### சிவகுரு தங்கம்பிள்ளை

அமரத்துவமடைந்த செய்தி அறிந்து துயருற்றோம். அன்னாரது ஆத்மசாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவர்தம் குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம். (71478)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## துயர் பகிர்கின்றோம்



23.02.2008

தெஹிவளையில் காலமான திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த

### திருமதி தம்பியப்பா சிவபாக்கியம்


அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (28.02.2008) வியாழக்கிழமை நடைபெறவுள்ளன. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(71479)

4 ...ில் பிள்ளையார் வீதி, ...ம்.

பாலகிருஷ்ணன் - ருக்மணிதேவி
கனடாவாழ் திருமதி நவரெத்தினம் -
பரமேஸ்வரி, பூபாலசிங்கம் நாகேஸ்வரி,
பாலகுமார் - விஜிதா, பத்மகுமார் -
சிவகுமாரி, சந்திரகுமார் - தெய்வமகள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அவனியில்
04
05
1929

அக்கினியில்
29
01
2008


### அமரர் முருகேசு மார்க்கண்டு

திதி: ஸப்தமி (28.02.2008)

கடந்த 29.01.2008 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.02.2008) வியாழக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப் பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோச னத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி, உடுப்பிட்டி மேற்கு, உடுப்பிட்டி. குடும்பத்தினர்.

## 29ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தாயின் மடியில்
17
★
02
★
1927

ஆண்டவன் அடியில்
31
★
01
★
2008

### அமரர் கந்தையா விநாசித்தம்பி

கடந்த 31.01.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.02.2008) வியாழக்கிழமை முற்பகல் புங்குடுதீவு கண்ணகைஅம்மன் கோயிலடி தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திம் (01.03.2008) சனிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகை தந்து நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

12ஆம் வட்டாரம்,
தல்லையபற்று முருகன் கோயிலடி,
புங்குடுதீவு. (71455)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நிர்வாக சபைத் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.28

ஆவரங்கால் கிழக்கு புதுவை அருள் முருகன் அறநெறிப் பாடசாலைக்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக ஓய்வுபெற்ற அதிபர் நா.சிவ ஞானமும், செயலாளராக செல்வி சு.துள சியும், பொருளாளராக ச.முரளிதரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ்.சைவ பரிபாலன சபையின் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவராகத் த.சண்முகலிங்கமும் செயலாளராக இ.தவகோபாலும் பொருளா ளராக மு.யோகராசாவும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (202)

## ஆனைக்கோட்டையில் நாய்கள் தொல்லை

நவாலி, பெப்.28

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதி களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை களால் இரவு வேளையில் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின் றனர்.

இரவு ஆனதும் வீதிகளில் நிற்கும் நாய்கள் கண்டையிடுவதாலும் ஊளை யிடுவதாலும் நித்திரைகொள்ள முடி யாது மக்கள் கஷ்டங்களை எதி நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் சம்பந்தப்பட்டவர்கள் இவற் றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவ டிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மக்கள் கேட்கின்றனர். (202-100)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

காரைநகரை சேர்ந்த கு.தையல்முத்து என்பவ ருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்று 4 ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள அடைக் கலமாதா ஆலயத்தில் (OLR) கண்டெடுக்கப்பட்டு பங்குத் தந்தையிடம் உள்ளது உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும். (71475)

## பெயர் மாற்றம்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பொன்னையா வேதநாயகம் ஆகிய நான் நாளை (29.02.2008) முதல் எனது பெயரை பொன்னையா மகா தேவன் என பெயர்மாற்றம் செய்துள் ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(சி/551610) பொ.மகாதேவன்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள்
ஆசிரியையான
திருமதி **கிருஷ்ணப்பிள்ளை செல்வராணி**
அவர்களது மறைவையிட்டு
வருந்தமுறுவதுடன், எமது
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை
யாக்குகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/பெரியபுலம் ம.வி. (71486)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட
இரசாயனவியல் துறையில் பணிபுரியும்
சி.சாந்தகுமார் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி

### சிவகுரு தங்கம்பிள்ளை

அவர்கள் 24.02.2008 அன்று காலமானதை அறிந்து மிகவும் மனவருத்தமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கிறோம்.

(71488)

யாழ்.பல்கலைக்கழகம்
விவசாயபீட நலன்புரிச் சங்கம்

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA பேட்டுக் குஞ்சுகள் 28.02.2008 விநியோகிக்கப்படும்.

- *ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- *மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- *சிற்றிபாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு
- *திருமகள் களஞ்சியம் - ... புரியடி

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி உமாசுதசர்மா
மதிவதனாவின் பாசமிகு தந்தை


### திரு அப்புத்துரைஐயர் கந்தசாமிஐயர்

அவர்களின் மறைவை யொட்டி ஆழ்ந்த கவலையடைவதுடன் இவரது குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஆசிரியவட்டம்
யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம்.

(71483)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்மகிழ
29
★
08
★
1976

மனம்நெகிழ
28
★
02
★
2007

### அமரர் இராசேந்திரம் இளஞ்செல்வன்

திதி: 18.02.2008

எம் கண்மணியுடன் மகிழ்ந்து வாழ்ந்திருந்த அந்த வைகறைப்
பொழுதிலே கயவர்கள் எம்மிடமிருந்து உம்மைப் பறித்தனரே!
உம் கண்மணியோ உம்முடன் நியமாக
வாழ முடியாது துடிக்கிறாளே! நாமும் உம் அடி சேரும் வரை
உம் சிந்தனை வழி வாழ்வோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கண்டி வீதி,
சாவகச்சேரி. (71474)

மனைவி, மகள்
மற்றும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணபிள்ளை செல்வராணி

(இளைப்பாறிய ஆசிரியை, கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி, யாழ்.பெரியபுலம் மத்திய மகா வித்தியாலயம், கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை)



ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி கிருஷ்ணபிள்ளை செல்வராணி 25.02.2008 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வ நாயகம் - பரமேஸ்வரி ஆகியோரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளியம்மையின் மருமகளும் கிருஷ்ண பிள்ளையின் (இளைப்பாறிய தட்டெழுத்தாளர்) அன்பு மனைவியும் Dr.குருபரனின் பாசமிகு தாயும் பாலச்சந்திரன் (இளைப்பாறிய படவரைஞர்), அமரர் சிவச்சந்திரன் (சிவனேஸ்), சிவராணி (தயா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விமலாதேவி, விஜயகுமாரி (ஜேர்மனி), தனேந்திரன் (யாழ்.பல்கலைக்கழக ஊழியர்), கல்யாணி (கனடா), நித்தியகல்யாணி (கனடா), இந்திராணி (கார்த்திகா), சாந்தி (ஜேர்மனி), வசந்தி (கனடா), மாணிக்கவாசகர் (மட்டுவில்), சரஸ்வதி (மட்டுவில்), அமரர் மகேஸ்வரி (மட்டுவில்), துரைராஜா (செல்லம்) ஆகியோரின் மைத்துனியும் கவிதா, தயாபரன் ஆகியோரின் சிறிய தாயும் பார்த்தீபன் (துரைராஜன் - கொக்குவில் இந்துக் கல்லூரி), சிவபரன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் - யாழ்ப்பாணம்), சிந்துஜா ஆகியோரின் பெரியதாயும், திருபரன் (விஞ்ஞானபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) கலைமதி (பழைய மாணவி கொ/ இராமநாதன் கல்லூரி), கிருபரன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), சியாமினி (ஜேர்மனி) ஆகியோரினது மாமியும் தவமணி மற்றும் அமரர்களான காராளபிள்ளை, சேனாதிராஜா (சேவை), இராஜேஸ் வரி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இல.66, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு - 13 இலுள்ள அன்னாரது சகோதரரின் இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இன்று (28.02.2008) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும்.

*ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
*தொ.பே.0112330935 (கொழும்பு)* (சி/551607)

தகவல்:
கணவர், மகன்,
சகோதரர்கள்.

### திருமதி இரத்தினராசா ஜெகதீஸ்வரி (ஜெயா)

(Nurse Endoscopy Unit, Jaffna Teaching Hospital)



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினராசா ஜெகதீஸ்வரி 24.02.2008 இந்தியாவில் காலமானார்.

அன்னார் கோ.இரத்தினராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் பரமேஸ்வரி (அளவெட்டி) தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்ற கோவிந்தா மற்றும் அன்னபூரணம் (நீர்வேலி) ஆகியோரின் மருமகளும் சிவகுருநாதன் (சுதுமலை), கணேஸ்வரன் (மன்னார்), காலஞ் சென்ற சிவனேஸ்வரி, மற்றும் பரமேஸ்வரன் (துவாரகா ஸ்ரோர் மல்லாகம்), யோகேஸ்வரி (ஆசிரியை, சென்மேரிஸ் பாடசாலை, இளவாலை), கணகேஸ்வரி, கேதீஸ்வரி (ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி), கேதீஸ்வரன், ரஞ்சினிதேவி (ஆசிரியை, விஜயரட்ணம் மகாவித்தியாலயம், நீர்கொழும்பு), சிவயோகநாதன் (F.A. நல்லூர் பிரதேச செயலகம்), ஜெயலட்சுமி ஆகியோரின் சகோதரியும் தர்மராசா (நீர் கொழும்பு), தேவராசா, காலஞ்சென்ற யோகராசா, மற்றும் அருந்தவமலர், ஜெகதீஸ்வரி, அமிர்தாம்பிகை, சிவகுமார், ஜெயந்திமாலா, இரவீந் திரமூர்த்தி, கிருஷ்ணபிள்ளை, ஜெயச்சந்திரன், நந்தினி ஆகியோரின் மைத்துனியும் சிவநாதன் (விஞ்ஞானபீடம் யாழ்.பல்கலைக்கழகம்) லாவன்யா (முகாமைத்துவ பீடம் யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாழக்கிழமை இன்று (28.02.2008) பிற்பகல் 1 மணிக்கு இராசவீதி (மாசுவன் சந்திக்கருகில்) நீர்வேலி வடக்கு, நீர்வேலி இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மாசுவன் இந்து மயானத் திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மாசுவன் சந்தி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (71481)

தகவல்:
கோ.இரத்தினராசா
(கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். புதிய அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் அறிவிப்பு



இஸ்லாமாபாத், பெப். 28

பாகிஸ்தானில் புதிய ஆட்சியமைக்க இருக்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு வெளியிலிருந்து ஆதரவு அளிக்கப்படும் என்று முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றியது. எனினும், ஆட்சியமைக்கத் தேவையான பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதையடுத்து நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சியுடன் கூட்டணி அமைத்து ஆட்சியமைக்க முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில், புதிய ஆட்சிக்கு வெளியில் இருந்து மட்டுமே ஆதரவு அளிப்போம். அமைச்சரவையில் பங்கேற்க மாட்டோம் என்று நவாஸ் ஷெரிப் அறிவித்துள்ளார்.

இந்தத் திடீர் மாற்றத்துக்கு என்ன காரணம் என்றுசெய்தியாளர்கள் கேட்டபோது, முஷாரப் ஜனாதிபதியாக இருக்கும்வரை ஆட்சியில் பங்கேற்க முடியாது என்று நவாஸ் ஷெரீப் ஆணித்தரமாகக் கூறினார். இதற்கிடையில் நவாஸ் ஷெரீப்பை இஸ்லாமாபாத்தில் சந்தித்துப் பேசிய பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் ஆனி பேட்டர்சன், ஜனாதிபதி முஷாரப்போடு இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். பாகிஸ்தான் மக்கள் கட்சி இணைத்தலைவர் ஆசிப் அலி ஜர்தாரியையும் அமெரிக்கத் தூதர் ஆனி பேட்டர்சன் சந்தித்து இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றில் நடக்கும் நம்பிக்கைத் தீர்மானத்தில் முஷாரப் வெற்றி பெற்றால் அவருடன் இணைந்து பணியாற்றுவோம் என பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பதவியேற்கவுள்ள மக்தூம் அமீன் பாஹிம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில பிரதமருக்குரிய வேட்பாளராக மக்தூம் அமீன் பாஹிம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

"நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சட்டப்படி அதிக சக்திவாய்ந்ததாக மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். நீண்ட காலமாக இருந்த இராணுவ ஆட்சியை அகற்றி ஜனநாயகப் பாதைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறோம். எனவே ஜனாதிபதிப் பதவியில் முஷாரப் நீடிப்பதா வேண்டாமா என்பதை நாடாளுமன்றம் முடிவு செய்யட்டும். நாடாளுமன்றில் நடக்கும் நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர் வெற்றி பெற்றால் அவருடன் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளோம்." - இவ்வாறு மக்தூம் கூறினார்.

## லண்டனில் பூகம்பம்

லண்டன்,பிப்.28

பிரிட்டனில் சில பகுதிககளைநேற்று அதிகாலை லேசான பூகம்பம் தாக்கியது. இந்தப் பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 5.1 என்ற அளவில் பதிவாகி உள்ளதாகவும், இதன் காரணமாக உயிரிழப்போ, பொருட் சேதமே ஏற்பட்டதாக உடனடித் தகவல்கள் வெளியாகவில்லை என்றும் பிரிட்டன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லண்டனிலிருந்து வடக்கே 205 கிலோ மீற்றர் தொலைவில் இந்த பூகம்பம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தனது இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது.

லண்டனில் உள்ள பல்வேறு வீடுகள் மற்றும் கட்டடங்களில் இந்தப் பூகம்பம் உணரப்பட்டதாகவும் உறக்கத்தில் இருந்த பலர் இந்த அதிர்வு காரணமாக விழித்துக் கொண்டு தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர் என்றும் லண்டன் காவல் துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பூகம்பம் காரணமாக யாருக்கும் காயம் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

## உலக அரங்கில்

## ரஷ்யாவில் பேச்சுச் சுதந்திரம் மிகவும் மோசமாகப் பாதிப்பு

### சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

நியூயோர்க், பெப்.28

ரஷ்யாவில் பேச்சு சுதந்திரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்கும் பத்திரிகையாளர்களின் படுகொலைகள் குறித்து விசாரணைகள் இடம்பெறவில்லை. சுதந்திர ஊடகங்கள் மூடப்பட்டுள்ளன எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கண்மூடித்தனமான சட்டங்கள் கருத்துத் தெரிவிப்பதற்கான உரிமையைக் கட்டுப்படுத்துகின்றன. அதிகாரிகள் அரச சார்பற்ற அமைப்புகளை மௌனமாக்க முயல்கின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யாவில் கருத்துச் சுதந்திரம் அச்சம் தரும் விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் இயக்குநர் கேட் அலென் தெரிவித்துள்ளார். அதிருப்தியை வெளிப்படுத்தும் கருத்துகளை முன்வைப்பவர்கள் கொலை செய்யப்படும் சூழ்நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முக்கிய தீவிரவாதி பாகிஸ்தானில் கைது பெனாஸிர் படுகொலையுடன் தொடர்பு

லாகூர்,பெப்.28

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் படுகொலையுடன் தொடர்புடைய முக்கிய தீவிரவாதியை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என அறியவருகின்றது.

காரி சைபுல்லா அக்தர் என்பவரும், அவரது மூன்று மகன்களுமே பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஜியோ நியூஸ் தொலைக் காட்சி நேற்றுச் செய்தி வெளியிட்டது.

ஒஸாமா பின்லேடனுடன் தொடர்பு வைத்துள்ள அக்தர், ஹர்க்கத்துல் ஜிகாத் அல் இஸ்லாமி என்ற தீவிரவாத அமைப்பின் தலைவராக உள்ளார். 2004 ஆம் ஆண்டு அரபு நாட்டில் கைது செய்யப்பட்ட அக்தர் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்பட்டார். எனினும் அவர் சந்தேகத்திற்கிடமான முறையில் விடுவிக்கப்பட்டார்.

கொலை செய்யப்படுவதற்கு முன் பெனாஸிர் பூட்டோ எழுதிய சுயசரிதைப் புத்தகத்தில் அக்தர் தம்மைக் கொலைசெய்யத் திட்டமிட்டிருக்கின்றார் எனக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 17 மாத அஞ்ஞாதவாசத்தின் பின்னர் தாயகம் திரும்புகின்றார் ஷினவத்ரா

பாங்கொக், பெப். 28

ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு 17 மாதங்களாக நாட்டைவிட்டு வெளியேறிய தாய்லாந்து முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ரா இன்று தாயகம் திரும்புகிறார்.

ஷினவத்ராவைக் கடந்த வாரம் சீனாவில் தாம் சந்தித்தார் என்றும் அவர் வியாழக்கிழமை (இன்று) பாங்கொக் திரும்பவுள்ளார் என்றும் தாய்லாந்தின் வெளியுறவு அமைச்சர் நோபடோன் பட்டமா தெரிவித்துள்ளார்.

தாய்லாந்துக்கு ஷினவத்ரா திரும்புவதைத் தொடர்ந்து அவருக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்போகின்றனர் என எதிர்க்கட்சியினர் அறிவித்துள்ளனர். இதனால், தாய்லாந்தில் பிரச்சினைகள் ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தாய்லாந்தின் பிரதமராக சமீபத்தில் பதவியேற்றுக் கொண்ட ஷினவத்ராவின் ஆதரவாளரான சமக் சுந்தரவஜ, மக்கள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

தாயகம் திரும்பும் ஷினவத்ரா தன் மீதான ஊழல் வழக்குகளை எதிர்கொள்வார் என்றும் தாய்லாந்தின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

## துடுப்பாட்ட வீரர்களிடத்தில் நம்பிக்கையில்லை - மஹேல

ஹோபர்ட்,பெப்.28

இந்தியாவுக்கு எதிராக ஹோபர்ட்டில் நேற்றுமுன்தினம் நடந்த சவாலான ஆட்டத்தில் துடுப்பாட்ட வீரர்கள் தன்னம்பிக்கையின்றி விளையாடியமையே தோல்விக்குக் காரணம் என இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன கருத்துத் தெரிவித்துள்ளார்.

தோல்விக்குப் பின்னர் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியவை வருமாறு:-

"சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இன்றைய ஆட்டத்தில் எதிரணிக்கு எமது வீரர்கள் போராட்டம் அளிக்கவில்லை. குறிப்பாக, துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பிவிட்டனர்.

270 முதல் 280 ஓட்டங்கள் வரை சேர்க்கக் கூடிய மைதானம் இது. அதில் வெறும் 179 ஓட்டங்களைச் சேர்த்தால் எப்படி வெற்றிபெறுவது? நுணுக்கமான ஆட்டத்தை வீரர்கள் விளையாடவில்லை. நம்பிக்கையில்லாமல் 'அவுட்' ஆகிவிடுவோமோ என்ற பயத்துடன் அவர்கள் விளையாடினர். முன்னைய ஆட்டங்களில் செய்த தவறையே மீண்டும் செய்துள்ளனர். " - என்றார் மஹேல.

## முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டங்களோடு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுகிறார் ஹொக்



சிட்னி, பெப்.28

ஆஸ்திரேலிய அணியிலிருந்து மூத்த வீரர்கள் ஓய்வுபெறும் படலம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பட்டியலில் கடைசியாக இணைந்திருப்பவர் சுழல் பந்து வீச்சாளரான பிரட் ஹொக்.

37 வயதான பிரட் ஹொக், ஆஸ்திரேலியாவில் தற்போது நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டங்களின் பின்னர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுகின்றார் என நேற்று அறிவித்தார்.

"தனிப்பட்ட காரணங்களுக்காக கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளேன். இதுவொரு உணர்பூர்வமானதும் கவலைக்குரியதுமான நேரம். ஒரு சில மாத முழுமையான ஓய்வுக்குப் பின்னர் எனது அடுத்த திட்டம் குறித்து நான் முடிவெடுப்பேன்." - இவ்வாறு கூறினார் பிரட் ஹொக்.

1996ஆம் ஆண்டு சர்வதேச போட்டிகளில் காலடியெடுத்து வைத்த இவர், கூடுதலான காலங்களில் போதிய அனுபவமின்மை காரணமாக அணியில் இணைக்கப்படமாலிருந்தார். ஷேன் வோர்னின் ஓய்வுக்குப் பின்னர் ஒருநாள் போட்டிகளுக்கான அணியில் முக்கிய வீரராக இடம்பிடித்திருந்த ஹொக், அவ்வகைப் போட்டிகளில் அண்மைக்காலமாகச் சிறப்பாகச் செயலாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை 121 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள பிரட் ஹொக் 154 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இரண்டு அரைச்சதங்களுடன் 745 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். 7 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ள ஹொக் 186 ஓட்டங்களைச் சேர்த்துள்ளதோடு 17 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

## விளையாட்டு அரங்குகளில்

## 'கோபமூட்டினால் தக்க பதிலடி' ஆஸி. அணிக்கு டோனி எச்சரிக்கை

மெல்போர்ண், பெப்.28

இறுதிப்போட்டிகளின் போது கோபமூட்டும் வகையில் நடந்துகொண்டால் ஆஸ்திரேலியாவுக்கு தக்க பதிலடி கொடுப்போம் என்று இந்திய அணித்தலைவர் டோனி எச்சரித்திருக்கிறார்.

இலங்கை அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் டோனி செய்தியாளர்களுக்குக் கூறியவை வருமாறு:-

"எங்களது துடுப்பாட்ட வீரர்கள் இலங்கைக்கு எதிராக மிகவும் நன்றாக விளையாடுவார்கள். இதனால் எப்போதும் இலங்கை அணிக்கு எதிராக மோதும் போது 5 பந்துவீச்சாளர்களுடன் விளையாட முயற்சிக்கிறோம். இந்தத் தொடரில் நாங்கள் இலங்கைக்கு எதிராக ஒரு யுக்தியையும், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஒரு யுக்தியையும் கடைப்பிடித்து வருகிறோம். இதன்படி இந்த ஆட்டத்தில் பிரவீண் குமார் சேர்க்கப்பட்டார். பிரவீண் துடுப்பாட்ட வீரர்களை ஏமாற்றக்கூடியவர். அவரது பந்துவீச்சுப் பாணி நேர்த்தியாக உள்ளது. அவரால் 135 கிலோமீற்றர் வேகத்துக்கு பந்து வீச முடியும். இந்தத் திட்டப்படி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அடுத்த ஆட்டத்தில் முனாப் பட்டேலுக்குப் பதிலாக, சிறிசாந்த் இடம்பெறுவார். டெண்டுல்கர் தேவைப்பட்டால் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அவரைப் பற்றி எழுதுபவர்கள் ஜாக்கிரதையாக எழுத வேண்டும்.

"ஆஸ்திரேலிய வீரர்கள்தான் கோபத்தை ஏற்படுத்தும் வகையில் முதலில் செயல்படுகிறார்கள். ஆனால், போகப் போக இதை எப்படிச் சமாளிப்பது என்பதை நமது இளம் வீரர்கள் கற்றுக்கொள்வார்கள். இறுதிப் போட்டியிலும் இதேபோல் நடந்துகொண்டால் தக்க பதிலடி கொடுப்போம்." - இவ்வாறு டோனி கூறினார்.

## பிரட்லீக்கு போடர் விருது



மெல்போர்ண், பெப்.28

இந்த ஆண்டுக்கான அலன் போடர் விருதை வேகப் பந்துவீச்சாளர் பிரட் லீ வென்றெடுத்துள்ளார். அவருக்குக் கிடைக்கும் முதலாவது போடர் விருது இதுவாகும். மெல்போர்ணில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விழாவில் வைத்து விருது வழங்கி பிரட் லீ கௌரவிக்கப்பட்டார்.

கடந்த ஓர் ஆண்டுக்கான சிறப்பான செயற்பாடுகளை மையமாக வைத்து ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை தனது வீரர்களுக்கு வருடந்தோறும் விருது வழங்கி வருகின்றது. இதன்படி கடந்த ஓராண்டில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் சிறப்பாகப் பிரகாசித்து தனது அணியின் வெற்றிகளுக்கு முக்கிய பங்காற்றிய பிரட் லீக்கு, உச்ச விருதான போடர் விருது வழங்கப்பட்டது. விருதுக்கான வாக்கெடுப்பில் பிரட் லீக்கு 125 வாக்குகள் கிடைக்கப் பெற்றன. அவருடன் போட்டியிட்ட ஹைடன் 107 வாக்குகளையும், பொண்டிங் 64 வாக்குகளையும் பெற்றனர்.

2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் போடர் விருதை வெல்லும் முதலாவது பந்துவீச்சாளர் இவராவார். கடைசியாக கிளென் மெக்ராத் 2000ஆம் ஆண்டில் மேற்படி விருதை வென்ற பந்துவீச்சாளராகத் திகழ்கின்றார்.

அதேவேளை, ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் வீரர் என்ற விருதையும் பிரட் லீ வென்றெடுத்தார். ஒருநாள் ஆட்டங்களுக்கான சிறந்த வீரர் விருதை மத்தியூ ஹைடன் சுவீகரித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லருக்கு 'ஸ்டாலின் கிராட்' போர்முனை போன்று படைத்தரப்பினருக்கு இப்போது வன்னிக் களம்

## புலிகளின் ஏடு தகவல்

''இரண்டாம் உலகப் போரில் ஹிட்லருக்கு படுதோல்வியைக் கொடுத்த ஸ்டாலின்கிராட் சண்டைக்களம் போன்று வன்னிப் போர் அரங்கு தற்போது திகழ்கிறது.

- இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நாள் தோறும் சண்டைகள் நடக்கும் கடுமையான சமர்க்களமாக வன்னிப் போர்க்களம் மாறியுள்ளது. கடந்த 8 மாதகாலமாக பல்வேறு தாக்குதல் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி நிலம் பிடிக்க படைத் தரப்பு முயற்சிக்கின்றது. எனினும், குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு அதனால் ஒரு நில ஆக்கிரமிப்பு வெற்றியைப் பெறமுடியவில்லை.

இதேவேளை, 'எடிபல', 'ரணகோச', 'ஜெயசிக்குறு', 'தீச்சுவாலை' என்று ஒவ்வொரு சமர்களுக்கும் பெயர் சூட்டிய சிங்களப் படைத் தலைமை கடந்த 8 -9 மாத காலமாக வன்னியில் நடக்கும் சண்டைகளுக்கு பெயர் சூட்டவில்லை. வெற்றி பற்றிய நம்பிக்கை யீனங்களால்தான் சண்டைகளுக்குப் பெயர் சூட்ட இராணுவத்தலைமை முன்வரவில்லை.

எனினும் பெயர் சூட்டப்படாத பெரும் சண்டைகள் வன்னிச் சமர்களில் நடந்தபடியே உள்ளன. வன்னிச் சமரின் படைப்பரிமாணம் பரந்து விரிந்தது.

வடபோர் முனை, மன்னார்க்களம், வவுனியாக்களம், மணலாற்றுக்களம் என்று வன்னிப்போர் அரங்கம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சமர் அரங்கிற்கும் பொறுப்பாக தகுதிவாய்ந்த தளபதிகளை நியமித்துள்ள புலிகளின் தலைவர், தமிழர் சேனையின் மரபுப் போர்ப் படைப்பிரிவுகளையும் அங்கு நிலைகொள்ள வைத்துள்ளார்.

கிட்டு பீரங்கிப் படையணி, குட்டி சிறி மோட்டார் படையணி, விக்டர் கவச எதிர்ப்புப் படையணி, சாள்ஸ் அன்ரனி படையணி, சோதியா படையணி, மாலதி படையணி, ஜெயந்தன் படையணி போன்ற தாக்குதல் படையணிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவு மற்றும் சினைப்பர் அணிகள், ஆர்.பி.ஜி. கொமாண்டோ அணிகள் போன்ற சிறப்பு அணிகளையும் சமரரங்கப் பகுதிகளுக்கு புலிகள் நகர்த்தியுள்ளனர்.

சுருக்கமாகச் சொன்னால் படையினரின் படைக் கட்டுமானங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தமிழர் சேனையில் படைக் கட்டுமானங்களை உருவாக்கிய புலிகள், வன்னிப் போரரங்கை படையினரின் புதை குழியாக வியூகம் வகுத்துள்ளனர்.

இப்போதைய சமரில் புலிகளின் சண்டை வியூகம் வேறுபட்டது. முன்னரங்கப் பகுதிகளிலே படைத்தரப்பு கடுமையாக சண்டையிடுகின்றது. கடந்த 8-9 மாத காலமாக வன்னியின் முன்னரங்கப் பகுதிகளே சமர் அரங்காக நிலைத்திருக்கின்றன. இந்த முன்னரங்கைத் தாண்டி உள்ளே வர முடியாது படைத்தரப்பு திணறுகிறது.

உள்நகர முன்னரே படைத்தரப்பு பல்வேறு சிதைவு நிலையை அடைந்துள்ளது என்றால் உள்நகர்ந்து அகலக்கால் பரப்பும் நிலை எழுந்தால் படைத்தரப்பு சந்திக்கவுள்ள அபாயம் பற்றிப் போரியல் ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

வன்னிப்பெருநிலப்பரப்பை ஆக்கிரமித்து புலிகளை அழிப்பது என்பதே வன்னிப் போரில் படையினரின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைய அது விரிவான நகர்வுத்திட்டத்தை நாடியுள்ளது. வன்னியின் கிழக்கு முனையான கொக்குத்தொடுவாயில் இருந்து மேற்கு முனையான திருக்கேதீச்சரம் வரையுள்ள முன்னரங்க நிலப் பகுதி எங்கும் கம்பளம் விரிப்பதுபோல படைகளை நகர்த்தி வன்னியை ஆக்கிரமிப்பது என்ற திட்டத்துடன் உள்ளது.

ஆனால், விடுதலைப் புலிகளின் படை நிலை வேறு விதமாக இருக்கும். தனது மண்ணில் தனது மக்களின் ஊர்களில் கால நீட்சியுடன் போர் நடக்கும்போது முழு வளத்தையும் திரட்டி மக்களை போர் மயப்படுத்தி வெற்றிகரமாக போரை முன்னெடுக்கும் வாய்ப்புகள் விடுதலைப்புலிகளுக்கு உள்ளது.

2ஆம் உலகப்போர் காலத்தில் ஜேர்மனியப்படையைச் சிதைத்து ஜேர்மனிக்கு படுதோல்விகளைப் பரிசளித்த ஸ்டாலின் கிராட் சண்டையை நினைவூட்டும் களமாக வன்னிப் போரரங்கம் காட்சி மாற்றம் கண்டுவருகின்றது.

ஹிட்லரின் ஜேர்மனியப்படைகள் சந்தித்த படுதோல்வியை மஹிந்தரின் படைத்தரப்பு சந்திப்பது திண்ணம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## கப்பல் கட்டணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்போது யாழ். - திருமலைக் கப்பல் பயணத்துக்கான ஒருவழிக் கட்டணமாக 3 ஆயிரத்து 162ரூபா 50சதம் அறிவிடப்படுகின்றது.

கப்பலில் பயணம் செய்யும் பயணி ஒருவர் தம்முடன் எடுத்துச் செல்லும் 25 கிலோ எடையுள்ள பொருள்களுக்கு கட்டணம் எதுவும் அறவிடப் படமாட்டாது.

பயணி ஒருவர் மேலதிகமாக 25 கிலோ பொருள்களை எடுத்துச் செல்ல விரும்பும் பட்சத்தில்மேலதிகமாக ஒரு ரிக்கெற்றுக்கான கட்டணத்தை செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## மஹிந்த - ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவினைவாதத் தலைமீடுகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டுள்ளன. எமது தேசப் பற்றாளர்களின் ஒன்றிணைந்த போராட்டத்தால் நோர்வே உட்பட விடுதலைப் புலிகளுக்கு சார்பான மேற்குலக நாடுகள் புறமுதுகு காட்டி ஓடிவிட்டன. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே தோல்விகண்ட மேற்குலகம் இந்தியாவைப் பயன்படுத்தி 13ஆவது திருத்தத்தை இலங்கையில் முன்னெடுக்கச்செய்து பிரிவினையை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறது. அதன் வெளிப்பாடுதான் மீண்டும் இந்தியா எமது பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டுள்ளது.

### தாளம் போடும் ரணில்

மேற்குல நாடுகளின் தாளத்திற்கு ஆட்டம் போட்ட ரணில் விக்கிரமசிங்கா, இன்று இந்தியாவின் தாளத்திற்கும் ஆட ஆரம்பித்துள்ளார். ஜனாதிபதியை வீட்டுக்குப் போக வேண்டுமென சுவரொட்டி ஒட்டும் அதேவேளை, ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடுகிறார். அந்த அளவிற்கு எதிர்க்கட்சித் தலைவரின் மவுசு குறைந்துவிட்டது.

மேற்குலக நாடுகளால் முன்னெடுக்க முடியாது தோல்விகண்ட பிரிவினைவாதத்தை இந்தியாவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. இதனையும் தோல்வியடையச் செய்வோம்.

இந்தியாவோ அல்லது எந்த ஒரு நாடுமோ எமது நாட்டுக்குள் புகுந்து பிரிவினைவாதத்தை ஏற்படுத்த இடமளிக்க மாட்டோம். அத்தோடு 13ஆவது திருத்தத்தை முன்னெடுக்கும் முயற்சிகளை தோல்வியடையச் செய்வோம். (அ)

## அகதிகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதி அந்தஸ்து கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவர் தன்னை நாடு கடத்துவதற்கு எதிராக தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த பின்னரே நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. குறிப்பிட்ட நபருக்கு சுவிட்ஸர்லாந்தில் தற்காலிகத் தஞ்சம் வழங்குமாறும் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த வருடம் 600 ஈழத் தமிழர்கள் சுவிட்ஸ்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளனர். (உ)

## விமானத் தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு வாரங்களாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள புலிகளின் இலக்குகள் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலின்போதும் தரைமார்க்கமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின்போதும் அதிக எண்ணிக்கையிலான புலிகளின் உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கடந்த இரண்டு வாரங்களாக வெலிஓயாவில் இடம்பெற்ற தாக்குதல்களில் 21 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தாம் கையேற்ற சடலங்களைக் கூடப் புலிகள் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்காமல் வேறுவிதமாக அவற்றை அடக்கம் செய்கின்றனர். - என்றார் அவர்.

## 11 வயதுச் சிறுவனை இராணுவத்தினர் காப்பாற்றினர்

பாடசாலைச் சிறுவன் ஒருவனை கடத்த முயன்றவர்களை இராணுவத்தினர் கைது செய்து பொலிஸில்ஒப்படைத்தனர். சிறுவனையும் காப்பாற்றினர். நேற்றுக் காலை 5.30 மணியளவில் தனிப்பட்ட ரீயூசனுக்கு சென்றுகொண்டிருந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவனான சுதுமலை வடக்கைச் சேர்ந்த 11வயதுச் சிறுவனை வெள்ளை வானில் தொடர்ந்து சென்றவர்கள் அவனைப் பிடிக்க முயன்றனர்.

சிறுவன் அழுதுகொண்டு வேகமாக ஓடியதைக் கண்ட அப்பகுதியில் கடமையிலிருந்த இராணுவத்தினர் சிறுவனைக் காப்பாற்றியதோடு வானில் வந்தவர்களையும் பிடித்தனர். சுதுமலை அம்மன் கோயிலுக்குச் சமீபமாக இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இராணுவத்தினரால் பிடிக்கப் பட்டவர்கள் மானிப்பாய் பொலிஸில் ஒப்படைக் கப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-95)

## ஐ.நா.செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை மேற்கோள்காட்டி முக்கிய இணையத்தளச் செய்தி ஆய்வு ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின்செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாக இங்கு விஜயம் செய்த அங்கெலா கானே அம்மையார் இங்கு கயிற்றில் நடக்க வேண்டிய நிலையில் காணப்பட்டார் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தான் கடைப்பிடிக்கும் கடுமையான அணுகுமுறை குறித்து நியாயப்படுத்துவதற்கான வாதங்கள் இலங்கை அரசிடம் காணப்பட்ட அதேவேளை, புறக்கணிக்க முடியாத அல்லது அலட்சியம் செய்ய இயலாத மனித உரிமை மீறல்களும் காணப்பட்டன.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள் இங்குள்ள நிலைமை குறித்து அங்கெலா கானே அம்மையாருக்குத் - தெளிவுபடுத்தியிருந்தன.

எனவே, பாதிக்கப்பட்ட தரப்புகளை அவர் இங்கு சந்தித்திருந்தாலும் கூட அவர் அறிந்து கொள்வதற்கு புதிய விடயங்கள் எதுவும் இருந்திருக்காதென அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## கிழக்கில் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். இவ்விடயம் தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் இச் சந்தர்ப்பத்தில் அங்குள்ள மக்களின் அரசியல் உரிமைகளையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கிழக்குத் தேர்தலில் போட்டியிட தமக்குப் பாதுகாப்பு இல்லையென்றும், கிழக்கில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்றும் கூறி சில அரசியல் கட்சிகள் இத் தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளன.

சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நற்பெயரைக் கெடுக்கும் நோக்கிலேயே அக்கட்சிகள் தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளன- என்றார் அவர். (சி)

## 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயம் குறித்து கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க,இந்த அரசமைப்புத்திருத்தத்தை ஐ.தே.கட்சி அரசே கொண்டு வந்தது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

"நீங்கள்தான் இதைக் கடுமையாக எதிர்த்தீர்கள். ஆர்ப்பாட்டங்கள் நடத்தினீர்கள். ஊர்வலங்கள், கடையடைப்புகள் போன்ற மோசமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டீர்கள். அப்போதே இதை நீங்கள் ஆதரித்திருந்தால் இவ்வளவு சிக்கல்கள் வந்திரா. இப்போதாவது இதை நடைமுறைப் படுத்தும் தெளிவு உங்களுக்கு வந்ததே. அந்தளவுக்கு நல்லது. நாம் அதற்கு எமது ஒத்துழைப்பைத் தருவோம்'' - என்று ரணில் பரிகாசத் தொனியில் கூறினார் எனத் தெரிகிறது.

இதனால் சீற்றமுற்ற ஜனாதிபதி ''அப்போது மட்டுமல்ல, இப்போதும் கூட என்னுடைய தனிப்பட்ட கருத்து ஒன்றுதான். அன்றைய நிலைப்பாட்டையே இன்றும் நான் கொண்டுள்ளேன். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட முறைமையை நான் அன்றும் ஏற்கவில்லை. இன்றும் ஏற்கவில்லை. ஆனால் அது தனிப்பட்ட எனது கருத்து. என்றாலும் இன்று அதனை நடைமுறைப் படுத்தும்படி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு என்னைக் கோருகின்றது. அதனை நான் தட்ட முடியாது. ஆகையால் அதைச் செயற்படுத்த முன்வருகிறேன்.அதற்காக எனது தனிப்பட்ட கருத்து நிலைப்பாட்டை நான் மாற்றி, குத்துக்கரணம் அடித்துவிட்டேன் என்று அர்த்தம் அல்ல." - என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதிலளித்தார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

## வாகன அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் மக்கள் குழுவின் பிரமுகர்கள் குழுவொன்று களத்துக்குச் சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் எடுத்து விளக்கினர்.

இந்தக் கள விஜயத்தின் பயனாக இணக்கம் காணப்பட்ட சில முக்கிய ஏற்பாடுகள் வருமாறு:-

* குறிப்பிட்ட வாகன அணி ஒன்று செல்லும் நேரம் 45 நிமிடங்களுக்கு கட்டுப்படுத்தப்படும். பலாலி வீதியில் இலுப்பையடிச்சந்தி, கந்தர்மடம், திருநெல்வேலிச்சந்தி உட்பட ஏனைய சந்திகளில் மக்கள் வீதிகளைக் கடப்பதற்கு அனுமதிக்கப்படுவர். வாகன அணி செல்லும் நேரத்தைத் தவிர்த்து இந்த நடைமுறை செயற்படுத்தப்படும்.
* வாகன அணி செல்லும் நேரத்தில் பாத சாரிகளாகவும், சைக்கிள்களிலும் பயணம் செய்வோர். வீதிகளில் வடக்குப் புறத்திலிருந்து தெற்கேயும், தெற்குப் புறத்திலிருந்து வடக்கேயும் கடப்பதற்கு அவகாசம் வழங்கப்படும்.
* துரையப்பா ஸ்ரேடிய சோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் இலகுபடுத்தப்படும். பயணிகள் சுமார் 100 மீற்றர் தூரத்தை மட்டுமே நடந்து சோதிப்பதற்கு வசதி செய்யப்படும்.
* கண்டி வீதியில் துரையப்பா ஸ்ரேடியச் சந்தியிலிருந்து நூலகத்துக்குச் செல்லும் ராஜேந்திரப் பிரசாத் வீதித்தடை நீக்கப்படும்.
* பாடசாலை தொடங்கும், முடிவுறும் நேரங்களில் யாழ். மத்தியகல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி மாணவர்கள், அவர்களது பெற்றோர் வேம்படி வீதியை இரட்டை வழிப்பாதையாகப் பயன்படுத்த முடியும்.
* மாநகரசபை எல்லைக்குள் உள்ள வீதிகளில் கிடங்காக வெட்டப்பட்டுள்ள வீதித்தடைகளை மாநகர சபையின் உதவியுடன் நிரப்ப ஏற்பாடு செய்யப்படும்.
* இராணுவக் காவலரண், முகாம்களுக்கு அருகில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தமது வீடுகளில் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர்.
* தீவுப் பகுதிக்குச் செல்பவர்களுக்கான போக்குவரத்துக்கு பண்ணை சோதனை நிலையம் காலை 6.30 மணிக்குத் திறக்கப்படும். அதே போல் தீவுப் பகுதியில் இருந்து வருபவர்களும் காலை 6.30 மணிக்கு நகருக்குள் அனுமதிக்கப் படுவர் தற்சமயம் பண்ணை சோதனை நிலையம் காலை 7.15 மணிக்குத் திறக்கப்பட்டுவருகின்றது.
* ஸ்ரான்லி வீதியூடான போக்குவரத்துக்கு மக்களை அனுமதிப்பதற்கு முதற்கட்டமாக, அந்த வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு வாகனங்களில் இருந்து பொருள்களை இறக்க அனுமதிக்கப்படும். (அ-1)

## மரண அறிவித்தல்

### திருமதி ஹரியற் தம்பிநாயகம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஹரியற் தம்பிநாயகம் நேற்று (27.02.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற J.V.தம்பிநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், அரியசோதி, ஏணஸ்ட் (பொறியியலாளர், கொழும்பு), Dr.சாந்தி (அமெரிக்கா), காலஞ்சென்ற தவநாயகம், அரியமணி (யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற விமலா ஆகியோரின் அன்புத் தாயாரும், முருகேசபிள்ளை, கிருபா, நெவில், இந்திரா (விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், றோகான் (ஜெய்ப்பூர் நிறுவனம்), ரோனிஜிகான்(YGro Ltd.), ஜெனி (சித்த மருத்துவம்), தாமரி, கிருஷான், அரவிந்தன், அருந்ததி, ஏரன், டினுஷா, சிவ்யா ஆகியோரின்அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (28.02.2008) வியாழக் கிழமை பி.ப. 3.30 மணியளவில் வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று நவாலி கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
(C)
தகவல்:
குடும்பத்தினர்.

NEW SCIENCE COLLEGE
2010 A/L
பொறியியல்
By: M.கருணாநிதி
Sat, Sun:
7.00 - 8.00 am
ஆரம்பம்:
01.03.2008

அறிவொளி
NALLUR
PHYSIC
A/L புதியபிரிவு
திரு. அன்பு
ஆரம்பம்:
29.02.08 FRI-4pm

BITSMANS
கல்வி நிறுவனம் - மானிப்பாய்
A/L 2010
இரசாயனம்
ஆசிரியர்
திரு.N.மகேஸ்வரன்
ஆரம்பம்:01.03.2008
SAT 3.30 pm
ஏனைய பாடங்களும் நடைபெறுகின்றன.

1st IN Com, G.A.Q
யாழ்.பல்கலைக்கழகம் (வெளிவாரி)
* பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
* இப்பிரிவுகளுக்கான புதிய விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
குறிப்பு:
1) G.A.Q பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான பதிவுகள்யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
2) புதிய பிரிவுக்குரிய விரிவுரைகளும் ஆரம்பமாகிவிட்டன.
விவரங்களுக்கு:- S. அருள் நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி,
ஆரிய குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

வீடு வாடகைக்குத் தேவை
உத்தரவாதமும் தகுந்த வாடகையும் வழங்கப்படும். நகரை அண்மித்த பகுதி விரும்பத்தக்கது.
தொடர்பு:- 155, 156, மின்சாரநிலைய வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P: 0773086894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.